In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள்மிகு

நாகசுப்பிரமணியர்

பூசை. ச. அருணவசந்தன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நீலமயில்மீது கோலக்குறவள்ளியுடன் வரும் குமரா வருக,
நிறைந்த வளமும் வாழ்வும் அருளுக!!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

உ

சுப்புலட்சுமி உடனாய சுப்புராயனே போற்றி! போற்றி!

ஸ்ரீ நாகசுப்பிரமணியர்

ஆசிரியர்
சிவமஞ்சரிச்செம்மல்,அருட்பணிஅரசு,சிவசேவாரத்னம்
பூசை.ச.அருணவசந்தன்



விஜயவருடம் ஆடி மாதம் 25,26 நன்னாட்களான(10,11-08-2013)
நாகசதுர்த்தி,நாகபஞ்சமி நாட்களில்
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன குரு மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் அருளாசியுடன்
வெளியிடப்பட்டது

சிவசுந்தரி கலைக்கூடம்
29,பீமண்ணா முதலி தோட்டத்தெரு,ஆழ்வார்பேட்டை,சென்னை-18

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



நூலின் விவரம்

நூலின் பெயர் ஸ்ரீ நாகசுப்பிரமணியர்

நூலின் ஆசிரியர் பூசை.ச.அருணவசந்தன்

பதிப்பு ஆண்டு:முதற்பதிப்பு- 30.08.2013 [ஆவணி மூலம்]; உரிமை:ஆசிரியருக்கு

பதிப்பாளர்/ ஆசிரியர்- பூசை.ச.அருணவசந்தன், ப.எண்.29,பீமண்ண முதலி கார்டன் தெரு
ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018 அலைபேசி 9941124964

பக்கங்கள் ;8 + 72 ஆக 80 பக்கங்கள் நூல் அளவு;கிரௌன் 1.4 -(24 c.m. x 18.2 c.m.)

அச்சிட்டுள்ள பரப்பளவு; 21.5 செ.மீ.X 15.2 செ.மீ.

பயன்படுத்தப்பட்டுள்ள தாள்:பலாப்பூர் 11.6கி.பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்:11.6 ஸ்ரீலிபி

மின் அச்சக்கோவை:சிவசுந்தரி, 14, செங்கழுநீர் பிள்ளையார்கோயில் தெரு
[சி.பி.கோயில் தெரு], மயிலாப்பூர், சென்னை-4

மறுதோன்றி அச்சகம்:தேவா ஆப்செட் பிரின்ட்டஸ்,சென்னை-600 005,

நூலின் பொருள்: முருகப் பெருமான் வழிபாட்டில் பாம்புகள் பெற்றுள்ள இடம். முருகனே பாம்பாக வந்து அருள்புரிதல். சர்ப்பக் காவடி முதலான செய்திகளின் தொகுப்பு

விலை : ரூபாய் 50/-

நூலகக் குறியீட்டு எண். -

அட்டையில்– நாகவாகனத்தில் அருள்மிகு சுப்பிரமணியர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாகர்கள் போற்றும் நாகசுப்ரமன்யா போற்றி!! பாம்பரசர்கள் பணியும் பரமனின் சுதனே போற்றி!
நாகாசல வேலவ போற்றி! நலமருள் நாயகனே போற்றி! போற்றி!!

நாக சுப்பிரமணியர்

பாரதத்தின் மிகத்தொன்மையான சமய வழிபாடுகளில் தலைசிறந்த இடம் பெற்றுள் ளது நாக வழிபாடாகும். பாரதத்தில் தோன்றி யுள்ள சமயங்கள் போற்றும், பெரும்பாலான தெய்வங்கள் நாகங்களோடு தொடர்புடைய வர்களாகவே இருக்கின்றனர். சிவபெருமான் பாம்புகளை ஆபரணங்களாக அணிந்திருப் பதால் பாம்பலங்காரர் என்றும், சர்ப்பாபர ணர் என்றும் போற்றப்படுகிறார். அம்பிகை பாம்பை அணிந்து நாகபூஷணியாகவும், நாகேஸ்வரியாகவும் விளங்குகின்றாள்.

ஆதிசேடன் என்னும் பெரும் பாம்பில் விஷ்ணு,பள்ளி கொண்டுள்ளார். விநாயகர் பாம்பைப் பூணூலாக அறிந்துள்ளார். இவ் விதம் அனைத்துத் தெய்வங்களும் பாம்பு களோடு ஏதாவது ஒரு வகையில் தொடர்பு கொண்டிருப்பதைக் காண்கிறோம். ஞானப் பிரானான முருகப்பெருமான் பாம்புவடி வாகவும், அது குடியிருக்கும் புற்றின் வடிவாக வும் விளங்கி, அன்பர்களுக்கு அருள்பாலித்து வருகின்றான்.

குமார மஞ்சரி தொடரில் வரும் இந்நூல், "நாகசுப்பிரமணியர்" என்னும் பெயரில் மலர் கிறது.இதில் பாம்புகளோடுதொடர்பு கொண் டுள்ள முருகனைப் பற்றிய செய்திகளை விரிவாகக் காணலாம். மேலும், இந்த இனிய வேளையில் வள்ளி தெய்வயானை உடனாய ஆறுமுகப்பெருமான் அன்பர்கள் அனைவருக் கும் சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வைத் தந்து இன்பமுடன் வாழ்விக்க வேண்டும் என்றுஅவர்தம்பொற்பாதங்களைப் போற்றி வணங்குகின்றேன். வாழி நலம் சூழ! - சிவசுந்தரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுப்புராயனும் - சுப்பு லட்சுமியும்

அன்பர்கள், அப்பன் என்ற சொல்லால் ஆண்டவனை அழைக்கின்றனர்."அம்மையே அப்பா ஒப்பிலாமணியே," என்கிறார் மணி வாசகர்."அப்பன் நீ,அம்மை நீ,அன்புடை மாமனும் மாமியும் நீ" என்கிறார் அப்பர்.

சிவபெருமான், அப்பன் என்றால் அவரது மகன் சுப்பனாக இருக்கிறான். அப்பனும் சுப்பனும் அடியவர்க்கு உதவும் பெருமான்களாக இருக்கின்றனர். "சு" என்ற எழுத்தை அப்பன் என்பதோடு முன்னொட்டாகச் சேர்த்து சுப்பன் என வழங்குகின்றனர். சு என்பது மேலான, சிறப்பான என்ற பொருளைத் தருகின்றது. முருகனைச் சுப்பன் என்று அழைக்கின்றனர். அரையன் என்னும் சொல் தலைவன், அரசன் என்ற பொருளைத் தரு கிறது. சுப்பனோடு அரையனைச்சேர்த்து சுப்புராயன் என்று அழைக்கின்றனர்.

முருகனுக்குரிய பெயர்களுள் சிறப்புப் பெற்ற ஒன்றாகச் சுப்புராயன் என்பது வழங்கி வருகிறது. குறிப்பாகப் பாம்பு வடி வில் தோன்றி அருள்பாலிக்கும் முருகப் பெருமானுக்குச் சுப்புராயர் என்ற பெயர் வழங்குகிறது.

மக்கள் சுப்பு, சுப்பன், சுப்புராயன் போன்ற பெயர்களைச் சூட்டிக் கொண்டுள் ளனர். வேங்கடசுப்பிரமணியன் என்பது போல வெங்கடசுப்பு என்ற பெயரையும் இட்டுக் கொள்கின்றனர்.

சுப்புராயனான முருகனைப் பிரியாது இருக்கும் வள்ளியம்மைக்குச் சுப்புலட்சுமி என்பது பெயர். அவள் சுப்புலட்சுமி எனப் படுகிறாள். பெண்களுக்குச் சுப்புலட்சுமி என்ற பெயரைச் சூட்டுகின்றனர். தென்னக மெங்கும் சுப்புலட்சுமி, சுப்பம்மாள் எனும் பெயர்கள் வழக்கில் உள்ளன. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

குக்கே(உடுப்பி) சுப்பிரமணியா

கன்னட நாட்டில் முருகப்பெருமானை பாம்பு வடிவில் போற்றி வழிபடும் வழக்கம் பரவலாக இருக்கிறது. உடுப்பி, தர்மஸ்தலா கொல்லூர் முதலிய அனேக தலங்களில் முருகனைப் பாம்பு வடிவில் எழுந்தருள வைத்துப் போற்றி வழிபடுகின்றனர். இவற்றில் தலைமையானது குக்கே சுப்பிரமணியா எனும் தலமாகும். இது தர்மஸ்தலம். உடுப்பி முதலான தலங்களுக்கு அருகில் உள்ளதாகும்.

இங்கு பெரிய மலை உள்ளது. அதற்குக் குமாரகிரி என்பது பெயராகும். அதிலிருந்து குமார தாரை என்ற சிற்றாறு தோன்றி ஓடுகின்றது. முருகப்பெருமான் தாரகாசுரனைக் கொன்றபின் தமது வேலைக் கழுவித் தூய்மைப்படுத்தவதற்காக இந்த ஆற்றைத் தோற்றுவித்ததாகக் கூறுகின்றனர்.

குமாரதாரை ஆற்றின் மேற்குக் கரையில் கிழக்கு நோக்கியவாறு ஆலயம் அமைந்திருக்கின்றது. தலைவாயில் மேற்கு நோக்கியுள்ளது. இதன் வழியாக உட்சென்றால் அகன்ற பெரிய பிராகாரத்தை காண்கிறோம்.

கருவறையில் கீழே உடலைச் சுருட்டிக் கொண்டு விரிந்த படத்துடன் கூடிய பாம்பும், அதன்மீது அதேபோன்று ஒரு பாம்பும், அதன் மீது மற்றோர் பாம்பும் என மூன்று பாம்புகள் ஒன்றன் மீது ஒன்றாக அடுக்காக (தூண் வடிவில்) அமைந்துள்ளன.

உச்சியில் உள்ள பாம்பின் படத்தின் மையத்தில் ஆறுமுகப் பெருமான் மயில் வாகனத்தில் எழுந்தருளியுள்ளார். இந்த அமைப்பு முழுவதற்கும் வெள்ளிக்கவசம் அணிவிக்கப் பெற்றுள்ளது. அருகில் உற்சவராகச் சில பாம்புகளின் உருவங்களும் உள்ளன.

பாம்புகளோடு அறுமுகப்பெருமான் அழகுடன் கொலுவிருக்கின்றான்.

கருவறைக்கு நேர்எதிரில் கருட கம்பம் உள்ளது. இதில் கருடன் வீற்றிருந்து பாம்பு அரசர்களையும், சுப்பிரமணியரையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போற்றி வழிபாடு செய்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தத் தூணையும் வெள்ளிக் கவச மிட்டு அழகுபடுத்தியுள்ளனர்.

இந்த ஆலயத்தின் வடகிழக்குப் பிரகாரத்தில் பஞ்சாயதன ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மையத்தில் உமா மகேசுவரர் வீற்றிருக்க சுற்றிலும் சூரியன், விநாயகர், அம்பிகை, திருமால் ஆகியோர் எழுந்தருளியுள்ளனர். மேலும் குக்கு லிங்கம் என்னும் பெயரில் சிவபெருமானும் எழுந்தருளியுள்ளார். இவர் பெயராலேயே இத்தலம் குக்கே சுப்பிரமணியா என்றழைக்கப்படுகின்றது.

இங்கு சிறப்பான வழிபாடுகளும் திருவிழாக்களும்நடைபெறுகின்றன. ஆண்டுதோறும் பெரிய அளவில் தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. இதற்காக மூன்று பெரிய தேர்கள் உள்ளன.

இக்கோயிலுக்கு வடக்கில் ஆதி சுப்பிரமணியா என்ற திருத்தலம் உள்ளது. இங்கு பெரிய பாம்புப் புற்று உள்ளது. அதன்மீது பெரிய அளவில் தங்கமுலாம் பூசிய பாம்பும் ஏராளமான சிறிய பாம்புகளின் வடிவங்களும் வைத்து வணங்கப்படுகின்றன.

இத்தலம் புராணப் பிரசித்தி பெற்ற திருத்தலமாகும். ஒரு சமயம் இந்த உலகத்தை உற்பத்தி செய்த காஸ்பனின் மனைவியரான கத்ரு, வினதை என்பவர்கள் ஒரு தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்கள் விளையாடிக் கொண்டிருந்த தோட்டத்தில் வெண்மையான ஒரு குதிரை அங்கு மேய்ந்து கொண்டிருந்தது. அதன் பின்பக்கமும், வாலும் ஒரு புதரில் மறைந் திருந்தது. அப்போது வினதை, கத்ருவிடம்," அந்தக் குதிரையின் வால் எந்த நிறம்," என்று கேட்டாள்."அது வெள்ளை நிறத்தையுடைய குதிரை. எனவே அதன் வாலும் வெண்மையாக இருக்கும்," என்று பதில் உரைத்தாள். அதற்கு கத்ரு, வினதையே அதன் வால் கரு நிறத்தை உடையது என்றாள். இப்படி இருவரும் தத்தம் கருத்தை வலியுறுத்திப் பேசிக் கொண்டே இருந்தனர்.

இறுதியில் அது வாய்ச்சண்டையாக உருவெடுத்தது. முடிவில் கத்ரு, வினதையிடம், "அதன் வால் வெண்மையாக இருந்தால் நான் உனக்கு அடிமை, கருப்பாக இருந்தால் நீ எனக்கு அடிமை இதற்குச் சம்மதமா?," என்றாள். வினதையும் அதற்கு ஒப்புக் கொண்டாள்.

கத்ரு உடனே ரகசியமாகத் தனது மக்களாகிய பாம்புகளை அழைத்துஅந்தக் குதிரையின் வாலைக் கடித்துத் தமது விஷத்தால் கருப்பாக்கும்படி ஆணையிட்டாள்.

பெரிய பாம்புகள் அதற்கு உடன்படவில்லை. பலமுறை சொல்லியும் தனது பேச்சைக் கேளாததால் கோபம் கொண்ட கத்ரு அந்தப் பாம்புகளைத் தனது குழந்தைகள் என்றும் பாராமல்,"நீங்கள் ஜனமேஜெயன் செய்யும் சர்ப்ப யாகத்தில் விழுந்து மொத்தமாக அழியுங்கள்" என்று சாபமிட்டாள்.

பேசாமல் அஞ்சி நின்ற இளைய நாகங்களைப் பார்த்து"நீங்கள் பறவைகளுக்கு இரையாகி மாளுங்கள்,"என்றாள். தாயின் சாபத்தால் வருந்திய பாம்புகள் தமது குல முதல்வர்களான வாசுகி, அனந்தன், ஆதிசேடன் ஆகிய மூவரையும் சரணடைந்து தங்களைக் காக்குமாறு வேண்டின. அவை அந்தப் பாம்புகளை அழைத்துக் கொண்டு கயிலாசத்திற்குச் சென்று சிவபெருமானைச் சரணடைந்து தம்மைக் காக்குமாறு விண்ணப்பித்தன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவபெருமான் அவற்றைப் பூவுலகில் குமாரகிரி என்று சொல்லப்படும் இந்த மலையில் உள்ள ஆற்றங்கரையில் தவம் இருக்கும்படியும், உங்களுக்கு இத்தலத்தில் யாராலும் எவ்விதத்திலும் எந்தத் துன்பமும் நேராது என்றும் அபயம் தந்து அருள் பாலித்தார்.

தாயின் சாபத்திற்குப் பயந்த சில பாம்புகள் குதிரையின் வாலைப் பற்றி அதைக் கடித்துக் கருமையாக்கின.

பின்னர் கத்ரு வினதையை அழைத்துக் கொண்டு, குதிரையின் அருகில் சென்று அதைக் காட்டினாள். அதன் வால் கருமையாக இருக்கவே வினதை தன் சொல்படியே அவளுக்கு அடிமையானாள்.

அடிமையான வினதை, எஜமானியான கத்ருவை அவள் செல்லும் இடமெலாம் அவளைச் சுமந்துகொண்டு செல்லவேண்டியதாயிற்று. இப்படியே பல காலங்கள் சென்றன.

காலப்போக்கில் வினதை இரண்டு முட்டைகளைப் பெற்றெடுத்தாள். 500 ஆண்டுகளாகியும் அந்த முட்டையில் இருந்து எதுவும் வெளிவராததால் அதனை அவள் உடைத்துப் பார்த்தாள்.

அதில் கால் மட்டும் வளராத நிலையில் ஒரு . மகன் இருந்தான். அவன் அவளைத் தொழுது, "தாயே, என் கால்கள் வளரும் முன்பே என்னை பிரசவிக்கச் செய்து விட்டாய். இன்னொரு முட்டையை உடைக்காதே அதிலிருந்து வலிய மகன் பிறப்பான்," என்று சொல்லிவிட்டுச் சூரியனை நோக்கித் தவம் செய்யத் தொடங்கினான்.

அவனுடைய தவத்தால் மகிழ்ந்த சூரியன் அவனுக்கு அருணன் என்று பெயரிட்டு அவனைத் தனது தேரோட்டியாக ஏற்றுக் கொண்டான்.

அவன் சொற்படி மேலும் 500 ஆண்டுகள் சென்றன, பிறகு முட்டையை உடைத்துக் கொண்டு கருடன் வெளிவந்தான். அவன் நடந்ததை அறிந்து, தனது ஆற்றலால் தாயின் துயரத்தை நீக்கி, அவளைவிடுதலை செய்தான் என்று புராணங்கள் விரிவாகக் கூறுகின்றன.

பின்னாளில் பல பாம்புகள் தாயின் சாபத்தால் சர்ப்ப யாகத்தில் வந்து வீழ்ந்து அழிந்தன. பறவைகள் தின்றதால் பல பாம்புகள் அழிந்தன.

ஆனால் இந்த குமாரகிரியில் அடைக்கலம் புகுந்த பாம்புகள் மட்டும் அழிவில்லாமல் இருந்தன. அவை வாசுகி, அனந்தன், ஆதிசேடன் முதலிய மூவரின் தலைமையில் சிவபூசை செய்து கொண்டு மகிழ்வுடன் இருந்தன. பின்னர் ஒருநாள் முருகனே பெரிய பாம்பாகத் தோன்றி அவற்றிற்கு அருள்பாலித்தார்.

அந்த சுப்பிரமணியனான பெரும் பாம்பை வழிபட்டதால் அவை தாயின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சாபத்திலிருந்து விடுதலை அடைந்தன. அதன் பிறகு பாம்புகள் பூமியில் செழித்து வளர்ந்தன என்று வரலாறுகள் கூறுகின்றன.

முருகன் நெடுங்காலம் பாம்பு வடிவமாக இருந்து இங்கு ஒரு குகையில் எழுந்தருளியிருந்து சிவபெருமானை வழிபட்டுத் தாரகனைக் கொன்ற பாவத்தைத் தீர்த்துக் கொண்டார் என்பர்.

அவர் வழிபட்ட சிவலிங்கம் குகையில் இருந்ததால் அது குக்குலிங்கம் என்று அழைக்கப்பட்டதுடன், அதைச் சுற்றியுள்ள இத்தலமும் குக்கே லிங்கம் என்று பெயர் பெற்றது. பின்னாளில் இது முருகன் பெயரால் குக்கு சுப்பிரமணியா என்ற பெயரில் வழங்கி வருகின்றது என்பர்.

மேலும், கர்நாடக மாநிலத்தில் கட்டி சுப்பிரமணியா என்ற ஒரு முருகத்தலம் உள்ளது.

சுப்பிரமணிய புஜங்கம்

ஆதிசங்கர பகவத்பாதர் அறுவகைச் சமயங்களை ஒன்றாக்கி நிலைபெறச் செய்ய முயன்றபோது, அபநவ குப்தன் என்பவர் அவர் மீது சூன்ய மந்திரங்களை ஏவி அவருக்குக் காசநோயை உண்டு பண்ணினான். அதனால் வருந்தி இருக்கும் வேளையில் அவருடைய கனவில் முருகன் தோன்றித் திருச்செந்தூருக்கு வரும்படி ஆணையிட்டார்.

அதன்படியே, அவர் முருகனைத் தரிசித்துப் பற்றி நிற்கும்நோயினின்று குணம் பெற எண்ணித் திருச்செந்தூரினை அடைந்தார். அவர் கோயிலுக்குள் சென்றபோது திருச்செந்தூர் முருகனை ஆதிசேஷன் வழிபட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான். அவர், அவன் வந்ததை நல்ல சகுனமாகவும், அவன் சரசர வென்று செல்லும் ஒலியைச் சந்தமாகவும் ஏற்றுக் கொண்டு முருகன்மீது,"சுப்பிரமணிய புஜங்கம்" எனும் நூலைப் பாடினார். வடமொழியில் புஜங்கம் என்பதற்குப் பாம்பு என்பது பொருள்.பாம்பு போன்று வளைந்து வளைந்து வெகுவேகமாகச் செல்லும் நிலையில் அமைந்த சந்தத்துடன் பாடிய பாடலே இங்கு புஜங்கம் எனப்பட்டது. இதனைப் பாடிமுடித்த அளவில் அவருடைய நோய் தீர்ந்து விட்டது என்பர். இது 33 பாடல்களைக் கொண்டதாகும். இந்நூலில் திருச்செந்தூர் குமரனின் பன்னீர் இலை விபூதியின் மகிமையைப் பற்றிப் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதில் சங்கரர் ஆறுமுகப் பெருமான் தன்னுள்ளத்தில் எழுந்தருளியிருந்து உலகம் உய்ய இதனைப் பாடியருளினான் என்று கூறுகின்றார். இதனை அடியொட்டி பின்னாளில் இதே சந்தத்தில் கணேச புஜங்கம் முதலான நூல்களும் பாடப்பெற்றதென்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சர்ப்ப வடிவில் குமாரசாமி வழிபாடு

கேரளம், கர்நாடகா, ஆந்திர மாநிலங்களில் முருகனைப் பாம்பு வடிவில் வழிபடும் வழக்கம் அதிகமாக இருக்கிறது. சுப்பிரமண்யா தலத்தினைச் சுற்றியுள்ள கொல்லூர், மூகாம்பிகா ஆலயம், தர்மஸ்தலா, கேரளத்திலுள்ள கன்னிமங்கலம் முதலிய அனேக இடங்களில் பாம்பு வடிவில் விளங்கும் குமாரசுவாமியைக் காண்கிறோம்.

கொல்லூர் மூகாம்பிகை ஆலயத்தில் ..

கொல்லூர் மூகாம்பிகை ஆலயத்தில் ஆறுமுகசுவாமி சந்நிதி உள்ளது. இதில் பாம்புப் படத்தின் நடுவே ஆறுமுக சுவாமி யை அமைத்துள்ளனர். சிறிய பாம்பு வடிவங் களும் வழிபாட்டில் உள்ளன.

கொரமங்கலத்தில் கண்ணனே கந்தனாக

கேரளத்துப் புராதன தெய்வீகக் கிராமங் களில் ஒன்று கன்னிமங்கலம். பாலக்காட் டிலிருந்து 50கி.மீ. தொலைவில் உள்ளது. இவ் வூரில் பெரிய அரச மரத்தின் கீழ் ஐந்து தலை நாகர் அமைக்கப்பட்டுள்ளது.

குமார சுப்பிரமணிய சுவாமியே இங்கு ஐந்துதலை அரவு வடிவில் விளங்குகின்றார். இவருக்குக் கேரளபாணியில் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது.

தைப்பூசத்தன்றும், குமார சஷ்டியன்றும் திரளான மக்கள் வந்து வழிபாடு செய் கின் றனர்.வீதியுலாவாக யானைகளின் பவனியுட னும் பெரிய விருந்துடனும் சிறப்பாக நடை பெறுகிறது. உள்ளூர்க்காரர்கள் இந்நாளில் தவறாமல் வந்து கூடிப் பெருமானை வழிபடு கின்றனர். இயலாதவர்கள் தமது காணிக்கை களை அனுப்பி விடுகின்றனர்.

இங்கு ஐந்தலைப் பாம்பின் நடுவே ஒரு சாண் உயரமுள்ள அழகிய குழந்தை வடிவம் உள்ளது.அதைக் கண்ணன் என்று சிலரும் கந்தனென்று சிலரும் கூறுகின்றனர். கந்தன் என்று போற்றுவதே பெருவழக்காக உள்ளது.

சிலர் கண்ணனையும், கந்தனையும் ஒன்றாகவே காண்கின்றனர். உடுப்பியில் கண்ணன் கோயில் வளாகத்தில் சுப்பிர மணியர் பாம்பு வடிவில் இருப்பதுடன் அக்கோயிலின் பெருந்தனத்தைப் பாதுகாப்ப வராகவும் போற்றப்படுவது இங்கு எண்ணத் தக்கதாகும்.

உடுப்பி கிருஷ்ணன் ஆலயத்தில்

உடுப்பி கிருஷ்ணன் ஆலயத்தில் சுப்பிர மணிய சுவாமிக்கென பெரியசந்நிதி உள்ளது. இதில் முருகன் பாம்புவடிவில் மேற்கு நோக்கியுள்ளார். பாம்பு படத்தின் நடுவே முருகன் திருவுருவம்அமைக்கப்பட்டுள்ளது.

இப்போது, சுப்பிரமணிய சுவாமி ஆலயம் அமைந்துள்ள இடத்தில் பெரும் பொருள் புதையலாக இருந்ததென்றும் அதை முருகன் பாம்பு வடிவம் கொண்டு காத்து வந்து தேவைப்பட்டபோது அளித்ததாகவும் தலவரலாறு கூறுகிறது. தலவரலாற்றைக் குறிக்கும் காட்சிகள் இந்தச் சந்நிதியைச் சுற்றிலும் சுவர்களில் வண்ண ஓவியங்க ளாகத் தீட்டப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முருகனின் மயிலும் நாகங்களும்

முருகனின் மயிலுக்கு உக்ரதுரகம் என்பது பெயர். துரகம் என்றால் குதிரை, முருகனின் மயிலை பச்சைப்புரவி(பச்சைக் குதிரை),தோகைப் புரவி (தோகையை உடைய குதிரை), ஆடும்பரி (ஆடிக் கொண்டிருக்கும் குதிரை), என்று குதிரையாகவே குறிக்கின் றனர். துரகம், புரவி, பரி என்ப வை குதிரை யைக் குறிக்கும் சொற்களாகும்.

குதிரை அடங்காமல் துள்ளும் தன்மை உடையது. அதை அடக்கி, தமது விருப்பப் படிச் செலுத்த அதற்குக் கடிவாளம் அணி விக்கின்றனர். குதிரையின் வாயில் பொருத்தி அதன் இரு முனைகளும் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் வகையில் அமைந்த கம்பி யின் முனைகளில் வளையங்களைப் பொருத் தியுள்ளனர்.அதில் தோல் வார்களை இணைத்து குதிரையின் பிடரி யில் கட்டியிருப்பர். மேலும் அவற் றிலிருந்து இரண்டு வார்களை இணைத்துக் கைப்பிடியாக வைத்திருப் பர்.இதை இழுப்பதன் மூலம் குதிரையின் வாயில் உள்ள கம்பி இழுபட்டுக் குதிரையை அடக்கும். இத னைக் கடிவாளம் என்று

அழைப்பர். முருக னின் மயில் உக்ர மான, ஆர்ப்பரிக் கும் குதிரையாக இருப்பதால் அதற்கு முருகன் நாகங்களைக் கடிவாளமாக இட்டுள் ளான். அந்த நாகங்களும் சாதாரண மான வையல்ல. அஷ்ட மாநாகங்களே கடிவாள மாக இருக்கின்றன.

நாகங்களைக் கொண்டு கட்டப்பட்டிருப் பதால் மயிலுக்கு நாகபந்தம் என்பதும் பெயர். அருணகிரிநாதர்,"நாகபந்த மயூரா நமோ நம," என்று கூறுவதைக் காண்கிறோம்.மயில் வாகனங்களை அமைக்கும் போது அதன் அலகில் நாகங்களைச் சேணங்களாக அமைத் தனர். காலப்போக்கில் கலைஞர்கள் நாகத் தைச் சேணமாக அமைக்காமல் அலகில் பற்றியிருப்பதுபோல் அமைக்கத் தொடங் கிவிட்டனர். அத்துடன்,மயிலின் பாதத்தடி யிலும், பெரிய பாம்பை அமைக்கின்றனர்.

மயில் அட்டமா நாகங்களை வென்ற டக்கிய தன் நினைவாக இப்படி அதன் பாதத் தடியில் பாம்புவடிவத்தை அமைக் கின்றனர் என்பர். சில மயில் வாகனங்களில் இரண்டு பாம்புக ளும் உள்ளன.❀

❀ திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் உள்ள செங்கத்திற்கு அருகில் ஜலகம்பாறை என்ற இடம் உள்ளது. சுற்றுலாத்தலமான இங்கு ஒரு பாறையின் மீது முருகனின் ஆலயம் அமைந்துள்ளது. பெரிய பாம்பு குடைபிடிக்க அதன்கீழ் சிவலிங்கம் உள்ளது போன்று இந்தக் கருவறை அமைக்கப்பட்டுள்ளது. இதனுள் முருகன் தேவியருடன் எழுந்தருளியுள்ளார். நாகலிங்கத்தில் முருகன் தோன்றுவது போன்று அமைந்த இந்த ஆலயம் புதுமையான கலை நயத்துடன் அமைந்துள்ளது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காஞ்சிபுரத்து அனந்த சுப்பிரமணியர்

காஞ்சிபுரத்தில் குமரகோட்டம் எனும் பெயரில் முதன்மை பெற்ற முருகன் ஆலயம் உள்ளது. இத்தலம் வரலாற்றுச் சிறப்புகளோடு புராணச் சிறப்புக்களையும் கொண்டது. தமிழில் கச்சியப்ப சிவாச்சார்யரால் இயற்றப்பட்ட கந்தபுராணம் அரங்கேற்றப் பட்ட இடம் என்ற தனிச் சிறப்பை உடையது. இத்தலத்தில் முருகப்பெருமான் பிரம்ம சாத்தன் வடிவில் எழுந்தருளியுள்ளான்.

இக்கோயிலில் உள்ள உலாத்திரு மேனிகளில் ஒன்றாக நாக சுப்பிரமணியர் வடிவம் உள்ளது. மக்கள் இதனை உடுப்பி சுப்பிரமணியர் என்றழைக்கின்றனர். இவருக்கு அனந்த சுப்பிரமணியர் என்பது பெயராகும். இவர் நாகவழிபாட்டுடன் தொடர்புடைய மூர்த்தியாவார்.

காஞ்சிபுரத்தில் பாம்பரசர்கள் கூடி வழி பட்ட தலங்கள் பல உள்ளன. சிவபெருமானைப் பாம்புகள் வழிபட்டு அவருக்கு ஆபரணமான பணாதரேச்சரம், பணாமணீச்சரம் என்னும் தலங்களும் திருமால் பாம்பு வடிவாக விளங்கும் திருஊரகம் என்ற தலமும், அனந்தன் என்ற பாம்பரசன் வழிபட்ட அனந்தேசம் என்ற தலமும் வாசுகி வழிபட்ட வாசுகீசரும்அமைந்திருப்பது இங்கு எண்ணத் தக்கதாகும்.

காஞ்சியில் அனந்தன் எனும் பாம்பரசனும் அவனது தேவியர்களும் சுப்பிரமணியப் பெருமானை வழிபட்டு, அருள் பெற்றனர். பின்னர், அவருக்குக் குடையாக விளங்கும் பேறுபெற்றனர். இதனை யொட்டியே இந்த அனந்த சுப்பிரமணியர் எனும் திருமேனி அமைக்கப்பட்டிருக்கின்றது. இதில் ஐந்து தலைகளைக்கொண்ட அனந்தன் தனது படத்தை விரித்து முருகனுக்குக் குடைப் பிடிக்கின்றான்.அந்தக் குடையின் கீழ் பாலசுப்பிரமணியராக முருகன் நின்றவாறு காட்சியளிக்கின்றார்.

அவர் இரண்டு கரங்களுடன் விளங்குகிறார். வலக்கரம் அபயமாகவும், இடக்கரம் ஊரு முத்திரையிலும் உள்ளன. இரு புறமும் வள்ளி தெய்வயானை ஆகிய தேவியர்கள் எழுந்தருளியுள்ளனர். அவர்களுடைய திரு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடியின் மீது அனந்தனின் தேவியர் படம் எடுத்துக் குடைபிடிக்கின்றனர்.

இதுபோன்ற திருமுருகன் வடிவத்தைப் பிற ஆலயங்களில் காண முடியவில்லை.

அனந்தன், குடைபிடிப்பதுடன் அவருக்கு ஆசனமாகவும் உள்ளான். சுப்பிரமணியரின் பஞ்சாசனத்தில் அனந்தன் என்ற வெண்ணிற மான பாம்பும் இடம் பெற்றிருக்கிறதென்று குமார தந்திரம் கூறுகிறது.

சிலர் அனந்தனுக்குப் பதிலாக மகாகாளன் என்பவன் மனைவியருடன் முருகனை வழிபட்ட இடம் என்பர். மகாகாளேசுவரர் எனும் பெயரில் அவன் அமைத்த லிங்கம் அருகில் இருக்கிறது.

கர்நாடக மாநிலத்தில் உடுப்பிக்கு அருகிலுள்ள சுப்பிரமணியா எனும் ஊரில் விளங்கும் முருகன் நினைவாக அன்பர் ஒருவரால் இத்திருமேனி அமைக்கப் பெற்றதென்றும், அதையொட்டி இவர் உடுப்பி சுப்பிரமணியர் என்று பெயர் பெற்றார் என்றும் கூறுவர். ஆனால் இக்கருத்து சரியானதல்ல.

இவர் மக்களுக்குப் புத்திரப் பேற்றை அருளும் மூர்த்தியாவார். மக்களின் நாகதோஷத்தை அழித்து நல்வாழ்வு அளிக்கின்றார். இவர் வம்சத்தை வாழ்விக்கும் பெருமானாகப் போற்றப்படுகின்றார். ❀

❀ பாம்பரசர்கள் பக்தியுடன் சதாகாலமும் குமரனை வழிபட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் முருகனின் பரிவாரமாக விளங்குகின்றனர். முருகன் ஆலயத்தில் நாகர்களுக்கென அமையும் தனிச்சன்னிதி நாகத்தம்பிரான் கோயில் என்றழைக்கப்படுகிறது.

❀ நாகரின் படத்தில் வள்ளி, தெய்வயானை உடனான முருகனை நிலைப்படுத்தி வணங்குகின்றனர். இவரை நாக சுப்பிர மணியர் என அழைக்கின்றனர். வடபழனி முருகன் கோயில், சென்னை கந்தகோட்டம் முதலிய தலங்களில் நாகசுப்பிரமணியரை தனியாக வைத்து வழிபடுகின்றனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாகத்தின் நோய் தவிர்த்த நாயகன்

அந்தர வெளியில் சுழன்று கொண்டிருக்கும் அண்டகடாகத்தை ஆதார சக்தியும், அச்சக்தியால் தாங்கப்படும் பெரிய ஆமையும், அதன் முதுகின்மீது அமைந்த எட்டு நாகங்களும், எட்டு யானைகளும் தாங்குவதாகப் புராணங்கள் கூறுகின்றன.

மேலே சொன்ன எட்டு நாகங்களை, அஷ்டமா நாகங்கள் என்பர். இந்த எட்டு நாகங்களில் வலிமை பொருந்தியதும், தலை சிறந்ததுமாக விளங்குபவன் வாசுகி என்ற பாம்பரசன். அவன் ஓராயிரம் தலைகளை உடையவன். அதிக பலம் கொண்டவன்.

ஒரு சமயம் சாகா வரத்தைத் தரும் அமுதத்தைப் பெறவேண்டித் தேவர்களும், அசுரர்களும் ஒன்று கூடி மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்ற இந்தப் பாம்பைக் கயிறாகவும் கொண்டு ஓரா்யிரம் ஆண்டுகள் பாற்கடலைக் கடைந்தனர். இறுதியில் சிவன் அருளால் அமுதமும் பெற்றனர்.

பாற்கடலில் அமுதத்தைப் பெற அசுரர்களும், தேவர்களும் மந்திர மலையில் வாசுகி என்ற இந்த .பாம்பைக் கட்டி ஓயாது இழுத்ததால், அதன் உடலெங்கும் புண்ணாயிற்று. அமிர்தத்தையுண்டும் அதற்கு அந்தப் புண்களால் உண்டான வருத்தம் தீரவில்லை.

துன்பத்தால் துவண்டு வருந்திய வாசுகி திருத்தணிகை மலையை அடைந்துத் தவம் செய்தான்.

முருகப்பெருமான், அவனுக்குக் காட்சியளித்தார். அப்பாம்பரசன் முருகப்பெருமானைப் பன்முறை வணங்கி,"ஐயனே! தேவர்களும் அசுரர்களும் என்னை அழுத்தமாகப் பற்றி முன்னும் பின்னும் இழுத்ததாலும், அம்மலையில் சிக்குண்டு முன்பின்னாகக் கடையும் போது ஏற்பட்ட உராய்வுகளாலும், என் உடலில் அளவற்ற காயங்கள் உண்டாகியுள்ளன. அமுதம் அருந்தியும் அது தீரவில்லை.

அதுஒரு பக்கமிருக்க நான் கக்கிய விஷம் சிவபெருமானின் கழுத்தில் நீங்காத கறையாகப் படிந்துள்ளது. நான் அத்தகைய அபசாரம்செய்ததைச் சிவபெருமான் பொருட்படுத்தவில்லையென்றாலும், என மனதிற்கு அது மிகுந்த துன்பத்தை அளிக்கின்றது அவை தீர அருள்புரிய வேண்டும்," என்று பன்முறைப் பணிந்து கூறினான்.

மகா வைத்தியநாதனாகிய முருகன் அவனை அருகில் அழைத்துஅவன் உடலைத் தடவிக் கொடுத்தார். அந்த அளவிலேயே

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவன் உடலிலிருந்த புண்கள் யாவும் சுவடின்றி மறைந்தன.

பெருமான்,"வாசுகியே! தேவர்களின் நலம் பொருட்டு உனது உடல் புண்ணாகித் தியாகத்தால் வருந்தினாய்.தியாகத்தின் பரிசாக உனக்கு அளவற்ற வலிமையைத் தந்தோம்.

மேலும், சிவபெருமானுக்கு நஞ்சளித்தது பற்றிக் கவலைப் படாதே. அந்தக் கறை அவர் ஒருவரே என்றும் அழியாது நிலைத்திருக்கும் பரம்பொருள் என்பதை உலகிற்கு அறிவித்து நிற்கின்றது. அவர் திரிபுர சம்ஹாரம் செய்யும்பொழுது மேருமலையை வில்லாக ஏற்பார். அதன் நாணாக விளங்கி நீ, மேலும் மேன்மை பெறுவாய்," என்று கூறிப் பல வரங்களையும் தந்து அருள் பாலித்தார்.

அன்று முதல் முருகப்பெருமான் நாகத்தின் **நோய் தவிர்த்த நாதன்** என்று தமிழிலும், "**நாகவாதனநிவாரணமூர்த்தி**,"என்று வடமொழியிலும் அழைக்கப்படுகின்றார்.

இதனை ஸ்கந்தலஹரி, தணிகைப் புராணத்திலுள்ள நாகம் அருள் பெறுபடலம் ஆகியவை விளக்கமாகக் கூறுகின்றன. ❀

முருகனின் பரிவாரமாக விளங்கும் வாசுகி

முருகனுக்கு அமைக்கப்படும் ஆலயங்களில் அவருடன் அவருக்குத் துணைத் தேவர்களாக (பரி வாரமாக) எட்டு அல்லது பதினாறு அல்லது முப்பத் திரண்டு என்ற எண்ணிக்கையில் பரிவார தேவதை களை அமைக்க வேண்டு மென்று குமார தந்திரம் என்ற நூல் கூறுகின்றது.

முப்பத்திரண்டு பரிவாரங்களில் ஒன்றாக வாசுகி என்ற பாம்பும் இடம் பெறுகின்றது. மேலும், வாசுகி முருகனோடு கொண்டுள்ள தொடர்பைப் பல்வேறு புராணங்களாலும் அறிய முடிகின்றது. சில நூல்களில் வாசுகி, பத்மன், ஆதிசேடன், அனந்தன் ஆகிய நால்வரும் முருகனின் சதுர்த்த பரிவாரம் என்று கூறப்பட்டுள்ளது.

முருகனுக்கு ஆதிசேடன் குடையாக இருக்க அனந்தன் வலப்புறமும் வாசுகி இடப்புறமும் நின்று ஏவல் புரிகின்றனர் என்பாருமுண்டு.முருகன் ஆலயங்களில் நாகர்களுக்குத் தனிச் சந்நிதிகள் அமைக்கப் பட்டுள்ளன.அதை நாகத் தம்பிரான் கோயில் என அழைக்கின்றனர்.

எழு தலைகளுடன் கூடிய அகன்ற படத்தை விரித்துக் கொண்டு உடலை மூன்றாக சுருட்டிக்கொண்டு அமர்ந்த கோலத்தில் வாசுகி காணப்படுகிறார். அவரது படத்தின் நடுவில் பால முருகன் காட்சிதருகிறார். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாக வாகனத்தில் முருகன்

முருகன் ஆலயங்களில் நடைபெறும் பெருந்திருவிழாவின் நான்காம் நாள் இரவில் நாக வாகனத்தில் முருகப்பெருமானை எழுந்தருளி வைத்து உலாக் காண்கின்றனர். அதற்கென ஆலயங்களில் மரத்தால் செய்து வண்ணங்கள் தீட்டப்பட்டுப் பொலிவுடன் விளங்கும் பெரிய நாகவாகனங்கள் உள்ளன.

சில ஆலயங்களில் புஷ்பங்களைக் கொண்டு நாக வாகனம் அமைப்பர். இதற்கு புஷ்ப நாகவாகன சேவை என்பது பெயராகும். பெரிய ஆலயங்களில் மரத்தால் செய்து வெள்ளி அல்லது தங்கத் தகடுகள் பொதிந்த நாக வாகனங்களையும் காண்கிறோம்.

இவ்வாகனத்தின் தத்துவம் பெருமானே. யோக வித்தைகளின் குறியீடாக மகாநாக மாகவும் அதனுள் இருந்து அந்தச் சக்தியை இயக்குவோனாகவும் இருப்பதை உணர்த்துகிறது.

சித்தர்கள் குண்டலினி எனும் யோக சக்தியைப் பாம்பு வடிவமாகக் கொள்வர். அது மனிதனின் உடலில் இடுப்பின் கீழ்ப் பகுதியில் சுருண்டு தூங்கும் நிலையில் உள்ள தென்பர். அதனை விழிப்புறச் செய்து ஆறாதாரங்களைக் கடப்பதே யோகநெறி எனப்படும்.

மூச்சுக்காற்றை கட்டுப்படுத்தி குண்டலினியைக் கனல்மூட்டி அதனை எழுப்புவதே யோகக் கலையின் முதற்படியாகும். இவ்வகையில் முருகன் இறைவனின் கண்ணில் இருந்து ஞானமயமாக வெளிப்பட்டு, தீக் கடவுளால் ஏந்தப்பெற்றுக் காற்றுக் கடவுளால் சரவணப் பொய்கையில் விடப்பட்டு ஆறு வடிவம் கொண்டு எழுந்து நின்றான். அதன் தத்துவம் குருவின் ஞானத்தால் காற்றுப் பயிற்சியாகச் சொல்லப்பட்டு முருகன் எனும் ஞானத்தீயாய்க் குண்டலினி எழும்புவதாகும். இதை உணர்த்துவதே நாக வாகனமாகும்.

இக்காட்சியில் நாகம் சுருண்டு படத்தை மட்டும் விரித்துள்ளது. அதன் நடுவில் முருகன் விளங்குகின்றான். தூங்கும் யோக சக்தியான குண்டலினி படம் விரித்து எழும்பத் தொடங்குவதையும், அதனை எழுப்பும் சக்தியாக முருகனும் காட்டப்படுகின்றனர். குண்டலினியை எழுப்பும் ஆதாரசக்தியாக விளங்குவதால், முருகன் யோகசாமி எனவும், சித்தன் எனவும் அழைக்கப்படுகின்றான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாக வாகனத்தில் பவனி வரும் வள்ளி தெய்வயானையர்

நாகம் என்ற சொல் மலை, யானை ஆகிய இரண்டடையும் குறிக்கிறது. மலைக் குறத்தியரை வள்ளியும், யானை வளர்த்த செல்வியான தெய்வ யானைப் பிராட்டியாரும் நாகத்தோடு தொடர்பு கொண்டவர்களாக உள்ளனர்.

வள்ளியும் தெய்வயானையும் தமது முற்பிறப் பில் அமுதவல்லி சுந்தரவல்லி என்னும் பெயரு டன் திருமாலின் கண்ணில் இருந்து வெளிவந்த ஆனந்தக் கண்ணீர்த் துளிகளில் இருந்து வெளிப் பட்ட போது திருமால் பாம்பணையில் பள்ளிக் கொண்டவராகவே இருந்தார். அதனால் வள்ளியும் தெய்வ யானையும் பாம்பணையில் தோன்றிய பாவையராகப் போற்றப்படுகின்றனர். ஆதிசேட னான பாம்பரசனும் வள்ளி, தெய்வயானையைப் போற்றி அவர்களுக்கு நிழல் தந்து வணங்கிக் கொண்டிருக்கிறான்என்பர்.வள்ளி, தெய்வ யானை யரை ஆதிசேடன் வாகனத்தில் அமர்த்தி உலாவரச் செய்கின்றனர். ❀

குராவடி நாகர்

❀ தஞ்சை மாவட்டத்தில் திருக்கடையூருக்கு அருகிலுள்ள திருவிடைக்கழியில் முருகனை ஐந்தலை அரவு வழிபட்டு முருகன் அருள் பெற்றதாகக் கூறுவர். எனவே இங்கு எழுந்த ருளியுள்ள முருகனை வழிபாடு செய்தால் சர்ப்ப தோஷங்கள் விலகி நல்ல குழந்தைப்பேறு உண்டாகும் என்ற நம்பக்கை நிலவுகின்றது. இக்கோயிலின் உட்பிரகாரத்தில் வடகிழக்கு மூலையில் சூரியன், பைரவர், அருகில் ஐந்தலைப் பாம்பின் வடிவம் நிலைப்படுத்தப் பட்டுள்ளது. மேலும், இந்தக் கோயிலின் தலவிருட்சமான குராமரத்தின்கீழ் சில நாகப் பிரதிஷ் டைகளும் செய்துள்ளனர். இந்நாகர்கள் குராவடி நாகர்கள் என்றழைக்கப்படுகின்றனர். ❀

❀ காஞ்சிபுரம் காமாட்சியம்மன் ஆலயத்தின் உட்கோபுர வாயிலில் முருகன் பாம்பு வடிவில் காட்சிதரும் சிறிய சந்நிதி உள்ளது.

❀ திருச்செந்தூரில்முருகனுக்குப் பின்புறம் அமைந்துள்ள பிராகாரத்தின் வழியாகச் சென்று பஞ்சலிங்கங்களைத் தரிசிக்கிறோம். இந்தப் பிராகாரத்தைப் பாம்புப் பாதை என்கின் றனர். பஞ்சலிங்க சந்நிதிக்குப் பாம்பறை என்னும் பெயரும் வழங்குகிறது. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மருதமலை முருகனின் அருள் பெற்ற பாம்பாட்டி சித்தர்

முன்னாளில் கொங்கு மண்டலத்தில் மக்களுக்கும் கால்நடைகளுக்கும் பாம்புகளால் ஏற்பட்ட தொல்லைகளும் இழப்பும் ஏராளமாகும். எனவே, பாம்புகளை அடக்கி அவற்றின் தொல்லைகளில் இருந்து காக்கும் மகான்கள் இம்மண்டலத்தில் தோன்றினர். இவ்வகையில் தோன்றியவர்களில் தலைசிறந்தவர்கள் தம்பக்கலை ஐயன், வாழைத் தோட்டத்து ஐயன் போன்றவர்களாவர். இவர்களுக்கெல்லாம் முன்னோடியாக கொங்கு மண்டலத்தில் தோன்றி அன்பர்களுக்குத் துணை நின்றவர் சித்தர் பாம்பாட்டி சித்தராவார்.

இவர் பாம்புகளை அடக்கி ஆண்டதாலும், பாம்புகளை ஆடச் சொல்லி ஆடு பாம்பே என்று முடியும் வகையில் கருத்துகள் பொதிந்த பாடலைப் பாடியதாலும் பாம் பாட்டிச் சித்தர் என்று பெயர் பெற்றார்.

இவரைப் பதினெட்டு சித்தர்களில் ஒருவராகப் போற்றுகின்றனர். இவர் பூத உடலுடன் வாழ்ந்து இப்போது சூட்சும உடலில் வசிக்குமிடம் கோவைக்கு வடக்கேயுள்ள மருதமலையாகும்.

மருதமலை, கோயம்புத்தூருக்கு வடக்கே நகரையொட்டி அமைந்துள்ளது. இங்குள்ள மலையின் மடியில் தண்டாயுதபாணிஆலயம் அமைந்துள்ளது. இந்த முருகன் ஆலயத்தையொட்டி அமைந்துள்ள மலைச் சரிவில் இவருடைய குகை உள்ளது. இதனைப் பாம்பாட்டிச் சித்தர் குகை என்றே அழைக்கின்றனர்.

இங்கு சில முனிவர் உருவங்களும் பாம்புச் சிலைகளும் வைத்து வழிபடப் படுகின்றன. இந்தக் குகையில் இருந்து செல்லும் சுரங்கப்பாதை முருகப்பெருமானின் கருவறையின்கீழ் சென்று முடிகிறது என்பர். பாம்பாட்டிச் சித்தர்அதன் வழியே உட்சென்று யோக நிலையில் நிலைபெற்றுள்ளார் என் கின்றனர். ❀

திருவடி தாங்கும் நாகம்

முருகப்பெருமானின் திருவடிவங்களில் மயில் மீது அமர்ந்திருக்கும் ஆறுமுக சுவாமியின் தொங்கவிட்டுள்ள திருவடியை ஒரு நாகம் தாங்குவதுபோல் அமைத்துள்ளனர். மயில் வடிவம் அண்ட கடாகத்தை தாண்டியதாகவும், அதில் வீற்றிருக்கும் முருகனின் திருவடி பாதாளத்தை ஊடுருவி நிற்பதையும் இது குறிக்கிறது என்பர். பாதாளத்திலுள்ள நாகர்கள் முருகனின் திருவடியை அர்ச்சித்துக் கொண்டிருக்கின்றனர் என்று புராணங்கள் கூறுகின்றன. அதைக் குறிக்கவே பெருமானின் திருவடி யை நாகம் தாங்கியிருப்பதாக அமைக்கின்றனர். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாகப் பிணையல் வழிபாட்டில் சுப்பிரமணியர்

மக்களுக்குக் குழந்தைபேறு அளிக்கும் தெய்வங்களில் முதன்மையானவர் முருகனாவார்.அவரை அடைந்து தொழும் அன்பர்களுக்கு அவரது ஓர் அம்சம் குழந்தையாக வந்து பிறந்து அருள்பாலிக்கும் என்பது நம்பிக்கையாகும்.

திருமணம் நடைபெற்று நீண்டகாலம் குழந்தைப்பேறு வாய்க்காதவர்கள் முருகனை நாகவடிவில் நிலைப்படுத்தி வணங்கி வந்தால் அவர்களது குலசாபம்,முன்னோர்சாபம், மற்றும் பலவகையான தோஷங்களும் நிவர்த்தியாகி விரைவில் பிள்ளைப்பேறு வாய்க்கும் என்பது நம்பிக்கையாகும்.

பூர்வ ஜென்ம வினைகளால் உண்டான புத்திரதோஷம் உடையவர்களுக்கும், நாகதோஷம் எனும் சர்ப்பதோஷம் உடையவர்களுக்கும் குழந்தைப்பேறு உண்டாகாது என்பது புராண ஐதீக நம்பிக்கையாகும். கடுமையான அந்தத் தோஷங்கள் நீங்கவும், குழந்தைப்பேறு உண்டாகி வம்சம் தழைக்கவும் பலவிதமானவழிபாடுகளைச் செய்கின்றனர். அவற்றில் முதன்மையானது நாகப் பிணையல்களின் நடுவே சிவலிங்கத்தை அமைத்து வழிபடுவதாகும். அதற்கு அடுத்தபடியானது பாம்புகளுடன் முருகனை வைத்து வழிபடுவதாகும். இரண்டு பின்னிப் பிணைந்த சிவசக்தி வடிவமான நாகங்களுக்கு நடுவில் பால முருகனை அமைத்து வழிபடுகின்றனர். இவ்வாறு நாகங்களுடன் முருகனை அமைத்து வழிபடுவதால்,கணவன்மனைவியருக்கு இருக்கும் மேற்குறித்த தோஷங்கள் நீங்கி அழகிய குழந்தைகள் பிறக்கும் என்பது நம்பிக்கையாகும்.

பொதுவாக அனந்தன் எனும் பாம்பின் படத்தின் நடுவில் **சுப்பிரமணியரை** அமைத்து வழிபடுவர். அவ்வழிபாட்டின் பயனாகப் பிறக்கும் ஆண் குழந்தைகளுக்கு அனந்த சுப்பிரமணியன் என்றும், நாகசண்முகன் என்றும், பெண் குழந்தைகளுக்கு அனந்த வல்லி, அனந்தவள்ளி, சுப்புலட்சுமி என்றும் பெயரிடுவது வழக்கமாகும்.

அனந்தன் என்னும் பாம்பு குடைபிடிக்க அதன்கீழ் குழந்தை வடிவில் முருகனை அமைப்பதே ஆதிகால முறையென்றாலும் காலப்போக்கில் இரண்டு பின்னிப்பிணைந்த பாம்புகளுக்கிடையே முருகனை அமைத்து வழிபடும் வழக்கம் வந்துவிட்டது.

இம்முறை வளர்ந்து பாம்புப் படத்தின் நடுவில் குழந்தை முருகனை வைப்பதற்குப் பதிலாக **(கல்யாண முருகனான)** வள்ளி தெய்வயானை நாயகியர் உடனாகிய முருகனை வைக்கும் வழக்கமும் வந்துவிட்டது.

முருகனுக்கு மட்டுமென்றே என்று ஆரம்பித்த இவ்வழக்கம் வளர்ந்து பாம்பின் நடுவில்கிருஷ்ணர், தம்இஷ்ட தெய்வங்களான விநாயகர் ஆகியோரையும் அமைக்கும் வழக்கமாகக் கருதுகின்றனர்.

நாகத்தின் நடுவில் ஆடிக் கொண்டிருக்கும் நவநீத கிருஷ்ணனுக்கு அனந்தகிருஷ்ணன் என்றும், சிவலிங்கத்திற்கு அனந்தேசுவரர் என்றும், ராமனுக்கு அனந்தராமன் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாகப் பிணையல்களும் சுப்பிரமணிய சுவாமியும்

திருமணம் முடிந்து நெடுநாட்களாகக் குழந்தைப்பேறு இல்லாதவர்கள் தமது வம்சம் தழைக்க வேண்டியும்,நல்ல குழந் தைகள் பிறக்கவும் நாகப்பிணையல்களை அரச மரத்தின் கீழ் நிலப்படுத்தி வணங்கு கின்றனர்.

.நாகப் பிணையல் என்பது இரண்டு நாகங்கள் தம்முள் பின்னிக் கொண்டு எதிர் எதிராக முகத்தை வைத்துக் கொண்டு ஆசைதீரப் பார்த்துக் கொண்டிருப்பது போல் அமைப்பதாகும். அவற்றின் இரண்டு முகங் களுக்கு நடுவே சிவலிங்கத்தை அமைத்து வழிபடும் வழக்கமே பெரும்பாலும் நடை முறையில் உள்ளது. சிவலிங்க வடிவமே அனைத்துத் தோஷங்களையும் நீக்கவல்லது என்பதால் தோஷ நிவர்த்திக்காக நிலைப் படுத்தப்படும் நாகப் பிணையல் களில் சிவலிங்கத்தை அமைத்தனர் என்கின்றனர்.



அதற்குப் பிறகு வம்சத்தை விருத்தி செய்பவனும்,குழந்தை வரம் வேண்டுப வர்களுக்குக், குழந்தைப் பேற்றை அருள்ப வனும் ஆகிய முருகனைப் பாலகுமாரனாக பாம்புப் பிணையல்களுக்கு நடுவே வைத்து வணங்கினர். இப்படி அமையும் முருகனை ஆனந்தக் கூத்தாடும் குழந்தை வடிவில் அமைத்தனர். கலைஞர்களும் அருளாளர் களும் தொடர்ந்து பலவிதமான கலை வடி வங்களில் நாகப்பிணையல்களின் நடுவே முருகனை அமைத்துள்ளனர்.

இரட்டை நாகங்களை அமைப்பதற்குப் பதிலாக ஒற்றை நாகத்தை நாகவாகனம் போல் செய்து,அதன் நடுவில் மயில் மீது அமர்ந்திருக்கும் பால சுப்பிரமணியரை அமைத்துள்ளனர்.

பெரம்பலூர் மாவட்டம்கங்க(விடங்க) நல்லூர் எனும் ஊரில் பாம்பின் உடலைப் பீடமாகவும், விரித்த ஐந்து தலை யைக் குடையாகவும் கொண்ட நாகராஜன் வடிவம் உள்ளது. அந்த பீடத்தில் மயில் மீது அமர்ந்தவராக முருகப்பெருமான் காட்சிய ளிக்கின்றான். இந்தப் பாம்பை ஆதிசேடன் என்றும் அனந்தன் என்றும் கூறுகின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொதுவாக நாகப்பிணையல்களில் நாகங்களுக்கு நடுவே இரண்டு கைகளிலும் தாமரை மலர்களை ஏந்திய பாலசுப்பிர மணியரை அமைப்பதே வழக்கம். அதற்குப் பதிலாக நடனமாடி மகிழ்ந்து கொண்டி ருக்கும் பாலசுப்பிரமணியரை அமைத்துள் ளனர்.

பாம்புப் படத்தின் கீழ் ஆறுமுகப் பெருமானை தேவியருடன் அமைக்கும் வழக்கம் உள்ளது. குக்கு சுப்பிரமணியா வில் நாகபடத்தின் கீழ் ஆறுமுகரைக் காண்கிறோம்.

இராமேசுவரத்தில் உள்ள நாகப் பிணையலில் ஆறுமுகன் அழகுடன் காட்சிதருகிறார்.

நாகங்களுக்கு நடுவே முருகனைத் தவழும் குழந்தையாகவும், கல்யாண முருகனாகவும் பல நிலைகளில் போற்றி வழிபடுவதைப் பரவலாகக் காண்கிறோம்.ஃ

நாக சுப்பிரமணியரும்-நாக கணபதியும்

நாகப் பிணையல் என்பது இரண்டு பாம்புகள் தமது உடலைப் பின்னிக் கொண்டு காதலுடன் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண் டவாறு இருக்கும் வடிவ மாகும்.

இந்த இரண்டு முகங்களுக்கு நடுவில் காதலால் பிறந்த தெய்வீக வாரிசைக் குறிக் கும் வகையில் குழந்தை வடிவிலான பால முருகன், பாலகிருஷ்ணன் ஆகியோரை அமைப்பதே வழக்கம்.

நடைமுறையில்,சகல தோஷங்களை யும் விலக்கி இல்லற வாழ்வில் இனிமை பெற அமைக்கப்படும் நாகப் பிணையல் களில் நடுவில் பாபஹரரும், புண்ணியவர்த் தனருமான சிவலிங்கத்தை அமைக்கும் வழக் கமும் நெடுங்காலமாக நிலவிவருகிறது.

இந்த முறைகளைக் கையாளாமல் பாம் புகள் தம்முடைலைப் பின்னிக் கொண்டு தங்கள் படங்கள் பின்பகுதியில் ஒன்றிணைந் தவாறு (முதுகோடு முதுகு ஒட்டியது போல்) பாம்புகளை அமைத்து, அவற்றின் படங்க ளுக்கு நடுவே முருகன் விநாயகர் திருவுரு வங்களை அமைத்திருக்கும் அபூர்வமான நாகப் பிரதிஷ்டைகளும் உள்ளன. இத்தகைய நாகப்பிரதிஷ்டை சென்னை ஏகாம்பரேசுவரர் ஆலயத்தில் இருக்கிறது.

சென்னை தங்கசாலைத் தெருவில் ஏகாம்பரநாதர் ஆலயம் உள்ளது. இந்த ஆல யத்தின் மேற்குப் பிராகாரத்தில் பெரிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



ஏழுதலை நாகம் குடைபிடிக்க அதன்கீழ் பத்துக் கரங்களுடன் வீற்றிருக்கும் பஞ்சமுக கணபதி பின்புறத்தில் ஏழுதலை நாகப்படத்தில் மயிலுடன் நாற்கரங்களுடன் காட்சி தரும் முருகன்.

அரசமரம் செழித்து வளர்ந்துள்ளது. அதன்கீழ் பக்தர்கள் நிலைப்படுத்திய பல நாகப்பிணை யல்கள் உள்ளன.

இவை கலையழகுமிக்கவை. இவற்றுள் ஒன்றாக மேலே குறிப்பிட்ட அபூர்வக் கலை வடிவம் உள்ளது. இதில் இரண்டு ஐந்து தலை நாகங்கள் உடலைப்பின்னிக் கொண்டு படம் எடுத்தாடுகின்றன. அவற்றின் படங் கள் ஒன்றோடு இணைந்திருக்க முகங்கள் எதிர்எதிர்த் திசைகளை நோக்கியுள்ளன. முன்னும் பின்னுமாக நோக்கியுள்ளன. ஒரு பாம்பின் படத்தில் பஞ்சமுக கணபதி காட்சி யளிக்கின்றார். மற்றோர் படத்தில் மயிலு டன்கூடிய சுப்பிரமணியரைக் காண்கிறோம். இவர் நான்கு கரங்களுடன் பாலசுப்பிரமணி யராக விளங்குகின்றார். இத்தகைய வடிவங் கள் அரியதாகும். இது சென்ற நூற் றாண்டின் அற்புதக் கலைப் படைப்பாகும். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சர்ப்ப மாலை அணிந்து ஆடிப்பாடும் மழுவடி சேவை

சமய சடங்குகளில் பூக்களை மாலையாக அணிவது மங்கலகரமானதும, மகிழ்ச்சி மிக்கதுமாகும். சிலர் பொன்னாலான பூக்கைளைக்கொண்டு தொடுத்த பொன்னரி மாலையையும், பொற்காசுகள் கோர்த்த காசுமாலையையும் அணிவர். அவை அவர்களது செல்வ நிலையையும் செழிப்பையும் காட்டு கின்றன. முருக வழிபாட்டில் தென்னகத்தில் இருந்த சில சடங்குகளில் பாம்பை மாலையாக அணியும் வழக்கம் இருந்தது. இது அச்சமும், அளப்பரிய தெய்வீக சக்தியையும் குறிக்கும் மாலையாக அமைகிறது. மழுவடி சேவை என்னும் சடங்கில் பாம்பை மாலையாக அணிந்தனர்.

மழுவடி சேவை என்பது முன்நாளில் முருகன் ஆலயங்களில் மட்டுமே சிறப்புடன் நடைபெற்று வந்து இப்போது அறவே வழக்கொழிந்து போன சடங்குகளில் ஒன்றாகும்.

இதில், ஆலயங்களில் நடனமாடும் பெண் ஒருத்தி பழுக்கக் காய்ச்சிய இரும்பைத் தனது வெறும் கைகளால், உலகம் சிறப்புடன் வாழ வேண்டும், மழை பொழிய வேண்டும், மண் செழிக்க வேண்டும் என்று பலவிதமான வாழ்த்துக்களைக் கூறி ஓங்கி அடிப்பாள்.

பழுக்க காய்ச்சித் தகதகவென நெருப்பைப் போல் ஜொலிக்கும் இரும்புக்கு மழு என்று பெயர். மழுவடி நடைபெறும் இடத்தில் கனமான இருப்புப் பலகையை வரட்டி, விறகுகளுக்கு இடையே வைத்துத் தீமூட்டுவர். பலமணி நேரம் எரியவிடும் போது தீயின் வெம்மையால் அந்த இரும்பு தீப்பிழம்பு போல் கனன்று ஜொலிக்கும். அப்படித் தீ வடிவாகி ஜொலிக்கும் இரும்பே கனல் மழுவாகும். இதில் ஏறத் தாழ இரும்பு உருகும் பதத்தில் இருக்கும். இந்த மழுவை வாழ்த்துக்கள் கூறி அடிப்பதால் இதற்கு **மழுவடிசேவை** என்று பெயர் உண்டாயிற்று.

இதில் பங்குபெறும் பெண் படம் எடுத்துச் சீறும் ஒரு நல்ல பாம்பை மாலையாக அணிவாள். இப்படி பாம்பைச் சிவபெருமான் போல கழுத்தில் ஒரு பெண் அணியும் முறை வேறெந்தச் சடங்கிலும் இடம் பெறுவதில்லை என்று கூறுகின்றனர்.

முருகன் ஆலயங்களில் நடைபெறும் காவடித் திருவிழாவின் ஓர் அங்கமாகவும், பெருந்திருவிழாவில் பந்தம்பறி எனும் விழாவின் ஓர் அங்கமாகவும் இந்த மழுவடி சேவை நடைபெறும். முருகன் பரிவாரங்களுடன் வீதிகளில் பவனி வந்தபின் ஆலயத்தின் முன்புறம் வந்து நிற்பார். அங்கு கோயிலைச் சேர்ந்த ஆடற்பணிப் பெண்கள் ஒன்று கூடுவர். அங்கு நாட்டிய வழிபாடு நடைபெறும்.

பின்னர் மழுவடி சேவை செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்டவள் மேளதாளத்துடன் அழைத்து வரப்படுவாள். அவள் முருகனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டி ஆடிப் பாடி நடனமாடுவாள். பிறகு மழுவடிக்குத் தயாராகக் கனன்று ஜொலித்துக் கொண்டிருக்கும் இரும்பைச் சுற்றி வந்து நடனமாடுவாள். அப்போது அவளுக்கு விபூதி அளிக்கப்படும். வாத்தியங்கள் பெரிய தாக முழங்கும். அவளது ஆட்டமும் வேகம் அடையும். மக்கள் அரோகரா அரோகரா என முழக்குவர். வாத்தியங்கள் படிப்படியாக உச்சகதியில் ஒலிக்கும். அவ்வேளை யில் அப் பெண் உலக மக்கள் மேலான வாழ்வுவாழ வாழ்த்தி சத்தியம் செய்வதுபோல் உள்ளங் கையால் ஓங்கி அந்த ஜொலிக்கும் இரும்பில் அடிப்பாள். அப்போது விளக்கெண்ணையை அந்த இரும் பின்மீது ஊற்றுவர். எண் ணைய் கொதித்து ஆவியாகப் பரவும். பெண் சுற்றி வந்து சுற்றி வந்து மீண் டும் வாழ்த்துக் களைக் கூறி அந்த இரும்பில் அடிப்பாள்.

இப்படி பலமுறை அடிப்பாள். பிறகு அவளது ஆட்டம் படிப்படியாக வேகம் குறையும். அவளுக்கு விபூதி அளித்து, அவள் தோளில் ஆடிக்கொண்டிருக்கும் பாம்பை எடுத்துக் கொள்வர். அவள் ஆடிப்பாடிய வாறே கோயிலுக்குள் செல் வாள்.முருக னும் தொடர்ந்து கோயிலுக்குள் செல்வார். மழுவடிக்கப்பட்ட இரும்பு குளிர்ந்ததும் அதில் பெண்ணின் கை பதித்த அடையாளம் ஆழமாக இருக்கும். தளிர் போன்ற பெண் ணின் கை தீயாக ஜொலிக்கும். இரும்பில் அழுத்தமா கப் பதிவதும் அதனால்



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பெண் ணின் மென்மையான கைகளுக்கு எந்தவிதத் தீங்கும் நேராமல் இருப்பதும் அச்சர்யமானதாகும். இது பக்தி உலகின் அதிசயமாகப் போற்றப்படுகிறது.

அவள் அணிந்திருந்த பாம்பை ஊர்வலமாக எடுத்துச் சென்று அருகிலுள்ள காட்டில் விட்டுவிடுவர். பாம்பை எடுத்து ஆட்டுவது தொன்மைச் சடங்குகளில் ஒன்றாகும். இது முருக வழிபாட்டில் மட்டுமே நிகழ்த்தப்பட்ட சமயச் சடங்காக உள்ளது.

மழு பொறுத்த விநாயகர்



மழு என்பது பழுகக் காய்ச்சிய இரும்பு வளம் பெருக்கும் சமயச் சடங்குகளில் ஒன்றான மழுவடி சேவையில்இளம் பெண் தனது தளிர்க்கரத்தால் வானகமும் வையகமும் வாழ மண் செழிக்க, மூன்று மாரி மாதமும் பொழிக, என்று பலவிதமான வாழ்த்துக் களைக் கூறி அதில் வாழ்த்துவதைப் பற்றி அறிவோம். அப்படி அடிக்கும் பெண்ணுக்குத் தீயினால் தீங்கு நேராமல் காத்தருளும் தெய்வமே மழு பொறுத்த விநாயகர் என்று அழைக்கப்படுகின்றார். மழுவடி சேவை நடைபெற்ற தலங்களில் மழுவடி சேவையை நிகழ்த்த விரதம் ஏற்கும் பெண் அதற்கென அமைந்த விநாயகர் கோயிலில் வழிபாடு நடத்தியபின் ஊர்வலமாக மழுவடித் தலத்திற்குச் செல்லும் வழக்கம் இருந்தது.

அவள் வணங்கி விடைப்பெற்றுச் செல்லும் விநாயகர் ஆலயத்திற்கு மழு பொறுத்த விநாயகர் என்பது பெயராயிற்று. மழுவினால் எந்தத் தீங்கும் வராமல் அந்நிகழ்ச்சியில் ஏற்படும் தீயின் வெம்மைத் தாம் பெற்றுப் பொறுத்துக் கொள்வதால், அவர் இப்பெயர் பெற்றார். காஞ்சிபுரத்தை ஒட்டி அமைந்ததும், புராதன சிறப்பு மிக்கதுமான பெருநகர் என்னும் கிராமத்தில் மழு பொறுத்த விநாயகர் ஆலயம் உள்ளது. இக்கோயில் முன்னாளில் இங்கு மழுவடி சேவை நடந்ததனை நினைவூட்டிக் கொண்டிருக்கும் ஆலயமாக உள்ளது.

மழு அடிப்பதோடு மழுவை கைகளில் வாரி எடுத்தல், நாவால் மழு எடுத்தல் முதலிய சடங்குகளும் இருந்து வந்துள்ளன. சத்தியத்தையும் தமது உறுதிப் பாட்டையும் விளக்க வந்தவர்கள் கைகளால் மழு வெடுத்துள்ளனர்.

சிவனே பரம்பொருள் என்பதை உறுதியிட்டுக் கூறிய ஹரதத்தர் மழுவாக ஜொலித்த முக்காலியின் மீது அமர்ந்து தமது கருத்துக் களைச் சுலோக பஞ்சகம் என்னும் நூலாகப் பாடி அதிசயம் நிகழ்த்தியுள்ளார்.

நாவால் மழுவெடுத்த நமச்சிவாயர் கசவிராயர் என்பவர் பற்றியும் வரலாற்றில் காண்கிறோம்.

விநாயகர் மழுவடி சேவையில் பங்கு பெறும் பக்தனின் இன்னல்களை ஏற்றுக் கொள்வதைப் போலவே பராசக்தியும் ஏற்றுக் கொள்கிறார். அவளுக்கு மழு பொறுத்த நாயகி என்னும் பெயர் வழங்குகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்னைக்கு வந்த திருப்போரூர் செல்வ முத்துக்குமரன்

அன்பர்களின் கனவில் முருகப்பெருமான் பல வடிவங்களில் தோன்றி எதிர்கால நிகழ்வுகளைக் கூறி, அவர்களை வழிநடத்துகின்றான். இவற்றில் சிறந்தது முருகன் தெய்வீக வடிவில் மயில் மீது அமர்ந்து வேலுடன் காட்சி தருவதாகும். அதிலும் சிறந்தது பெருமான் பாம்பாகக் காட்சியளிப்பதாகும். பல அன்பர்களுக்கு நாக வடிவில் முருகன் காட்சியளித்த பிறகு அவர்களுடைய செல்வநிலை பல மடங்கு கூடியதைப் பலரும் கூறக் காண்கிறோம்.

எடுத்துக்காட்டாக, முருகன் பாம்பு வடிவில் காட்சியளித்து கோயில் அமைக்க ஆணையிட்டு அருள்பாலித்ததையும், அதன்படி அமைந்த இரண்டு கோயிலின் வரலாறுகளையும் இனிக் காணலாம்.

திருப்போரூர் செல்வக் கந்தசாமி சென்னைக்கு எழுந்தருளி சென்னை கந்த கோட்டத்தில் நிலைபெற்றதான வரலாறு

ஒரு கால கட்டத்தில் தமிழகத்தில் மாற்றுச் சமயத்தவர்கள் மனம் போனபடி படையெடுத்துக் கொள்ளையடித்துச் சூறையாடினர். அவர்கள் கோயில்களையும், குளங்களையும் பாழ்படுத்தினர்.

இப்படிப் பட்ட ஒரு சோதனை மிகுந்த காலத்தில் திருப்போரூரில் அமைந்துள்ள திருமடத்தையும் கந்தசாமி கோயிலையும் பொன்னம்பலத் தம்பிரான் என்பவர் ஆண்டு வந்தார். அவர் நாட்டில் நடைபெறும் அட்டூழியங்களால் மனம் வருந்தி, மூலவர் சிலைக்கு ஆபத்து நேரலாம் என்றஞ்சி கந்தசாமி கோயில் உற்சவரையும் நகைகளையும் நிலவறைக்குள் சேமித்து விட்டு மூலத்தானத்தைக் கல்சுவர் வைத்து மூடி விடும்படி தமது உதவியாளர் அண்ணாமலை என்பவருக்கு ஆணையிட்டுத் தாமும் ஒடுக்கத்தில் சென்று தவநிலையில் ஈடுபட்டார்.

அவருடைய எண்ணப்படியே மாற்றுச் சமயத்தினர் கோயிலைக் கொள்ளையிட்டுப் பாழ்படுத்தினர். அவர்கள் செய்த அக்கிரமங்களுக்கு அளவேஇல்லை. இதனால் ஆலயத்தில் பூசையும் வழிபாடும் அற்றது. இதனால் முருகப்பெருமான் ஊரின் தென்புறத்தில் இருந்த வேப்ப மரத்தின்கீழே அமைந்திருந்த புற்றில் எழுந்தருளினார்.

காலங்கள் மாறிக் கலகமும் ஓய்ந்து அமைதி திரும்பியது. பொன்னம்பலத் தம்பி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரான் கோயிலை அடைந்து மீண்டும் அதனை முன்போலவே புதுமை பொலியச் செய்தார். இழந்து போனவற்றை மீண்டும் ஈட்டினார். பூசைகளை முறைப்படி இயற்றுவிக்க ஏற்பாடுகளைச் செய்தார்.

பின்னர் ஒரு நல்ல நாளில் மூலவரை மூடி நிற்கும் கல்திரையை அகற்றும்படி ஆணையிட்டார். கல்திரை அகற்றப்பட்டது. உள்ளே (பழைய சுயம்பு மூர்த்தமான) கந்தசாமியின் அபிஷேகத் திருமேனியைக் காணவில்லை. அவர்தான் வேம்பு மரத்தின் கீழுள்ள புற்றில் எழுந்தருளிவிட்டாரே!

இதனால் மனம் கலங்கிய தம்பிரான் சோர்ந்து வீழ்ந்து மயங்கினார். அவர் உயிர் கந்தசாமியின் திருவடியில் கலந்து விட்டது. அவருக்குப் பிறகு அம்பலவாணத் தம்பிரான் என்பர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவருடைய கனவில் முருகன் தோன்றி, தான் புற்றிலிருப்பதை உணர்த்தி, தன்னை மீண்டும் ஆலயத்தில் எழுந்தருளி வைக்கும் படி உத்தரவிட்டார். ஆனால், அம்பல வாணத் தம்பிரானின் நினைவோ அழிந்து பட்ட கோயிலைப் புதியதாகச் செப்பனிட்டு முன்னை விட விரிவான திருப்பணிகளைச் செய்வதிலும், இழந்துபோன பொன், பொருள் முதலானவற்றைச் சேர்ப்பதிலுமே முழுமையாக ஈடுபட்டிருந்தது. அதனால் அவர் அந்த நினைவின் அடிப்படையில் தோன்றும் கனவாக இது இருக்கவேண்டும் என்று எண்ணி, அதன் மீது அதிக கவனம் செலுத்தாமல், அதனை ஒதுக்கிவிட்டார்.

ஆனால், முருகனோ மீண்டும் மீண்டும் அவர் கனவில் தோன்றி புற்றில் இருக்கும் தனது திருவுருவத்தை மீண்டும் ஆலயத்தில் நிலைப்படுத்திக் குடமுழுக்கு செய்யும்படி கூறிக்கொண்டே இருந்தார்.

தம்பிரானின் ஊழ்வினைப் பயன் வலியதாக இருந்ததால், முருகன் பலமுறை ஆணை தந்தும், அவர் அந்த ஆணையை சிரமேற்கொண்டு அந்தப் பணியைச் செய்து புண்ணியத்தைப் பெற முடியாமல் போய் விட்டது.

பின்னர், முருகப்பெருமான் திருப்போரூரில் வசித்து வரும் அனேக அன்பர்களின் கனவில் விரிவாகவும் பலர் மீது ஆவேசித்து இறங்கி வந்தும், தாம் வேம்பு மரத்தின் கீழ்புற்றில்எழுந்தருளியிருப்பதை உணர்த்தித் தம்மை ஆலயத்தில் எழுந்தருளி வைத்துக் குடமுழுக்கு செய்து முறையாகப் பூசிக்கு மாறு ஆணையிட்டார்.

அவர்களுடைய நேரத்தின் விளைவு அவர்களும் பெருமானின் ஆணையை ஏற்கவில்லை. அவர்களின் எண்ணம் முழு வதும் கோயிலை மீண்டும் பொலிவுற அமைத்து குடமுழுக்கு செய்வதிலேயே இருந்தது. ஆதலால் கோயிலில் பல பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. பூஜைகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நடந்தன. அபிஷேக மூர்த்தியான கந்தசாமி இல்லாமல் மூல மூர்த்திக்கும் யந்திரம் முதலான தேவதைகளுக்குமே பூசைகள் நடைபெற்றன.

அந்நாளில் சென்னையின் மையப் பகுதியில் பிளாக்டவுன் என்றழைக்கப்பட்டு, இன்று ஜார்ஜ்டவுனாக விளங்கி வரும் பகுதியில் வேலூர் மாரி செட்டியார் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் குல ஒழுக்கம் தவறாத சிறந்த பண்பாளர். அவருக்கு ஏற்ற மனைவியாக ஆதிலட்சுமி என்ற அம்மையார் விளங்கினார். செட்டியாரின் இல்லறம் நல்லறமாக விளங்கியது.

சென்னையின் மையப் பகுதியாக விளங்கும் ஜார்ஜ்டவுனின் ஒரு பகுதியான முத்தியாலுப்பேட்டையில் ஒரு பழுத்த பக்தர் இருந்தார். அவருடைய பெயர் கந்தப்பாசாரி என்பதாகும். இவர் பெத்து நாயக்கன் பேட்டையில் முத்தியாலு நாயக்கர் என்பவருடைய தோட்டத்தில் சர்வ சித்தி கணபதிக்கு ஒரு கோயில் கட்டி அங்கு வழிபாடுகள் செய்து வந்தார். மக்கள் இவரைக் கந்த பண்டாரம் என்றே அழைப்பர்.மேலே குறிப்பட்ட மாரிசெட்டியாரும் இந்த கந்த பண்டாரமும் பக்தியில் நெகிழ்ந்து நண்பர்களாயினர். செட்டியார் முருகபக்தர். ஆசாரியார் கணபதி பக்தர்.

இவர்கள் இருவரும் கிருத்திகை தோறும் கால்நடையாகவே சென்னையிலிருந்து புறப்பட்டு திருப்போரூர் சென்று முருகப் பெருமானை வழிபாடு செய்து சென்னைக்கு மீள்வது வழக்கம்.

இப்படியாக (1595 ஆம் ஆண்டு பிரமாதீச வருஷம் மார்கழி மாதம் 13ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று)கிருத்திகைக்கு செட்டியாரும் ஆசாரியாரும் திருப்போரூருக்குச் சென்றனர்.



அங்கு செங்கண்மாலுசர் கோயிலுக்குத் தெற்கில் அமைந்துள்ள குளக்கரையில் செழித்து வளர்ந்திருந்த வேப்பமரத்தின்கீழ் பயணக்களைப்பைப் போக்கிக் கொள்ள ஓய்வெடுத்தனர். குளிர்ந்த காற்று வீசியது. கந்தப்பாசாரியார் மேல்துண்டைப் போட்டுப் படுத்தார். சுகமான காற்றாலும் வழிநடைக் களைப்பாலும் அங்கே அயர்ந்து உறங்கி விட்டார்.

அவர் மடிமீது தலைவைத்து மாரி செட்டியாரும் படுத்தார். அவரும் உறங்கி விட்டார். அப்போது முருகப் பெரு மான் ஒரு பாம்பு வடிவம் கொண்டு புற்றி னில் இருந்து வெளி வந்து செட்டியாரின் மார்பின் மீது படம் எடுத்தார். இதனால் செட்டியாரின் உறக்கம் கலைந்தது. அப்போது முருகன் அவருக்குக் காட்சியளித்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவரிடம், "அன்பனே! முன்னொரு காலத்தில் இங்கு கோயிலில் பூசையும் விழாவும் குறைந்தபோது நாம் இப்புற்றில் எழுந்தருளினோம். காலம் மாறியதும் நாம் இப்புற்றில் உறைவதை மக்களுக்கும் மடாதி பதிகளுக்கும் பலமுறை உணர்த்தினோம். ஆனால், அவர்கள் அசட்டையாக இருந்து விட்டனர்.

நீ என் பரமபக்தன். எனவே, என்னை நீ எடுத்துச் சென்று வழிபடுவாய்," என்று ஆணை யிட்டார். அதே சமயம் கந்தப்பண் டாரத்தின் கனவிலும் தோன்றி அதைக் கூறி உறுதிப் படுத்தினார்.

அக்காட்சி மறைந்தது சற்று நேரத்திற்குப் பின் உணர்வு வரப்பெற்று இருவரும் எழுந்து அளவளாவினர். பின்னர் அங்கிருந்த புற்றை லேசாக உதிர்த்தனர். அதனுள் இருந்த கந்த சாமியின் கல்திருமேனியைக் கண்டு பரவசம் எய்தினர்.

பின்னர் புற்களையும் தழைகளையும் இட்டுமூடிவிட்டு வழக்கப்படியே கோயிலுக் குச் சென்றனர். நீராடி, கோயிலை வலம் வந்து கிருத்திகை விழாவைக் கண்டுகளித் தனர்.

அன்றிரவு புற்றை அகழ்ந்து பெரு மானை எடுத்துக்கொண்டு சென்னைக்குப் பயணமாயினர். விரைந்து திருவான்மியூருக்கு வந்து அங்குள்ள குளத்தில் நீராட்டினர். பிறகு மயிலாப்பூர், திருவல்லிக்கேணி முதலிய இடங்களில் வழிபட்டு, பெத்து நாயக்கன் பேட்டையை அடைந்தனர்.

சூரியனும் உதித்தெழுந்தான். கந்தசாமி பண்டாரம் வழிபட்டு வரும். விநாயகர் கோயிலுக்குப் பெருமானை எடுத்துச் சென்று வைத்தனர். இதனை அறிந்த சென்னை வாசிகள் பலரும் திரண்டு வந்து அங்கு பெருமானை வழிபட்டனர். வைசியர்கள் பலரும் அப்பெருமானுக்குக் கோயில் கட்டி குடமுழுக்கு செய்ய விரும்பினர்.

அவர்களுக்குத் தலைவராக விளங்கி வந்த தம்புசாமி செட்டியாரும், லிங்க செட்டி யாரும் அங்கு வந்து, திருப்பணிக்கு உதவ வாக்களித்தனர். அதன் பிறகு தோட்டத்தின் சொந்தக்காரரான முத்தையால் நாயக்கரை வரவழைத்துக் குமரனுக்கு கோயில் கட்ட இடம் தந்து உதவுமாறு வேண்டினர். அவர் மகிழ்ந்து அப்பொழுதே தானப் பத்திரத்தை எழுதி அந்த நந்தவனத்தைக் கோயில் கட்ட அவர்களுக்கு வழங்கிவிட்டார்.

ஆனால் ஆரம்பத்தில் இருந்த வேகம் வரவரக் குறைந்துவிட்டது. இதனால் மாரி செட்டியார் மனம் வருந்தினார். பின்னர் அதை உணர்ந்த அவருடைய மனைவி ஆதி லட்சுமி அம்மையார் தன்னுடைய பொன்னா பரணங்கள் அனைத்தையும் அவரிடம் கொடுத்து கோயில் கட்டும்படிக் கூறினார். அந்த நகைகளை விற்று முதலாக்கி கோயில் கட்டத் தொடங்கினர்.

திருப்பணி விரைந்து நடைபெற்றுக் குடமுழுக்கும் ஆயிற்று. பெயருக்கேற்பவே செல்வ முத்துக்குமார சுவாமியாக இன்று, முருகன் காட்சியளித்து வருகின்றான். அக்கோயிலே இன்றையசென்னை கந்தகோட் டமாகும்.

கந்தசாமி கோயிலின் தூண்களில் நாக வடிவில் விளங்கும் முருகனின் உருவச் சிலைகள் செதுக்கப்பட்டிருப்பதைக் காண லாம். வைகாசி பரணிநாளில் கந்தசாமி கோயி லில் புஷ்ப நாக ஊஞ்சலில் பெருமானை அமர்த்தி விழாக் காண்கின்றனர்.

இவ்வாறு முருகப்பெருமான் பாம் பாகத் தோன்றி அருள்பாலித்த வரலாற்றைப் பல இடங்களிலும் காண்கிறோம். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாகம் பந்தனமான நட்சத்திர முருகன் கோயில்

ஆலயங்களில் கருங்கல்லால் அமைந்த இறை வடிவங்களையும் அதன் பீடத்தையும் அஷ்டபந்தனம் என்ற மருந்து கொண்டு இணைப்பர்.கும்பாபிஷேகத்தின்மிக முக்கிய நிகழ்ச்சியாக மருந்து சாத்துதல் எனும் அஷ்டபந்தனத்தினை சாத்தும் நிகழ்ச்சி அமைகிறது. பல ஆலயங்களில் அஷ்டபந்த னத்தின் அதில் வெள்ளித் தகடுகளைப் பதித் தும் (ரஜித பந்தனம்) தங்கத் தகடுகளைப் பதித்தும் (சுவர்ண பந்தனம்) செய்து கும்பா பிஷேகம் செய்வது வழக்க மாகும். பன்னி ரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த மருந் தைச் சாத்தினால்தான் தெய்வீக ஆற்றல் அங்கு முழுமையாக இருக்கும் என்று பூஜா பத்ததி நூல்கள் கூறுகின்றன.

இதையெல்லாம் கடந்து ஒரு பாம்பே முருகனுக்குப் பந்தமான செய்தி நமக்கு வியப்பைத் தருகின்றது. இனி அதனைக் காணலாம்.

வடாற்காடு மாவட்டத்தில் செங்கம் போளூர் பாதையில்அமைந்துள்ள மோட்டூர்-வில்வாரணி எனும் ஊர்களுக்கு இடையே ஒரு சிறு குன்று அமைந்துள்ளது. இதன் மீது நட்சத்திரக் கோயில் என்றழைக்கப்படும் அழகிய முருகன் ஆலயம் உள்ளது. இங்கு சுயம்பு மூர்த்தியாக சிவலிங்க வடிவில் முருகப் பெருமான் எழுந்தருளியுள்ளார். இதற்கான காரணத்தை விளக்கும் செவிவழிக் கதை ஒன்று இப்பகுதியில் வழங்குகின்றது. அது வருமாறு:

ஒரு சமயம் ஐயாசாமி சிவாச்சாரியார், முன்சீப் ஐயா என்ற இரண்டு அன்பர்கள் இப்பகுதியில் வாழ்ந்துவந்தனர். அவர்கள் இருவரும் கிருத்திகைதோறும் திருத்தணிக்கு அன்பர்களுடன் சென்று முருகப்பெருமானை வழிபட்டுத் திரும்புவது வழக்கம்.



அவர்கள் பல ஆண்டுகள் தொடர்ந்து இந்த அருட்பயணத்தை மேற்கொண்டிருந் தனர். வயது முதிர்ந்த நிலையில் அவர்களால் பயணம் மேற்கொள்ள முடியவில்லை. அவர்கள் வருந்தி அழுது தங்கள் இயலா மை யை முருகப்பெருமானிடம் முறையிட்டனர்.

அவர்களுக்கு இரங்கிய முருகப் பெரு மான் அவர்களுடைய கனவில் தோன்றி இங்குள்ள மலையே தணிகை மலையாக நினைந்து இந்த மலையின் மீது ஏறி வருமாறும் அங்கு தாம் அவர்களுக்குக் காட்சி அளிப்பதாகவும் கூறினார்.

நள்ளிரவில் கண்விழித்த அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் விசாரித்து கனவினை நினைந்து ஆர்வம் மிகுதியால் அந்த இரவிலேயே மலைமீது ஏறி முருகனைத் தொழுதனர்.

அவர்களுக்குப் பெருமான் மின்னல் போல காட்சியளித்தார். அவர்கள் தங்களுக்கு முருகன் காட்சியளித்த இடத்தில் ஒரு சுயம்புலிங்கம் இருப்பதைக்கண்டு அதனைத் தொழுது மகிழ்ந்தனர். பின்னர் அவர்கள் மலையை விட்டிறங்கித்தாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றபடி அங்குள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மக்களை அழைத்துக் கொண்டு மலைமீது சென்றனர். அதற்குள் பொழுது புலர்ந்து விட்டது.

அவர்கள் இருளில் ஒளி வடிவில் தமது கண்முன் கண்டு மகிழ்ந்த இறைவனையும் சுயம்புலிங்க வடிவான முருகனையும் இப்போது இனம் காண முடியாது வருந்தினர். அப்போது ஒரு பாம்பு தோன்றியது. அது அந்த சுயம்புலிங்கத் திருமேனியை சுற்றி வளைத்தது. பின்னர் அனைவரும் காண அதற்குப் பந்தனமாகியது.

உடனே அனைவரும்," முருகா, முருகா," என்று விண்ணதிர ஒலியெழுப்பிய பின்னர், தொடர்ந்து அங்கே வழிபாடுகளை நடத்த ஏற்பாடு செய்தனர். அந்தக் கோயிலே இன்று நட்சத்திரக்கோயில் என்று வடாற்காடு மாவட்டத்தில் தனிச் சிறப்புடன் திகழ்கிறது. கிருத்திகை தோறும் ஏராளமான மக்கள் இங்கு வந்து வழிபாடு செய்கின்றனர்.

இங்கு மலையடிவாரத்தில் விநாயகர், ஆஞ்சநேயர், நவக்கிரகம் ஆகியோருக்குச் சிற்றாலயங்கள் உள்ளன. அழகிய அலங்கார மண்டபம் உள்ளது. இங்கிருந்து மலைக்குச் செல்ல நன்கு செதுக்கி அமைக்கப் பெற்ற படிகள் உள்ளன. அதில் ஏறிச்சென்றால் மேற்கு நோக்கிய தலைவாயிலை அடைய லாம். இதன் வாயிலிலும் ஒருவிநாயகர் எழுந் தருளியுள்ளார். அவரை வணங்கி மூன்றுநிலை கோபுரம் கொண்ட இந்த வாயிலைக் கடந்து உட்சென்றால் அகன்ற பிராகாரத்தை அடையலாம்.

இங்கு வலம் வரும்போது சிவலிங் கமும் அம்பிகையும் எழுந்தருளியுள்ள சன்னதி களைக் காண்கிறோம். இனி வலம் வந்து கிழக்குப் பக்கத்திலுள்ள மகா மண்டபத்தை அடைய லாம். மகா மண்டபத்தின் மேற்கில் கிழக்கு நோக்கியவாறு கருவறை அமைந்துள்ளது. கருவறையில் சிறிய சுயம்புலிங்கத் திருமேனி யாக முருகப்பெருமான் காட்சி அளிக்கிறார். எனவே இவருக்குச் சிவசுப்பிரமணியசுவாமி என்பது பெயராயிற்று.

இதற்குப் பின்புறம் அமைந்த மேடையில் அழகிய கல் திருமேனிகளாக முருகன், வள்ளி, தெய்வானை ஆகியோரின் திருவுருவங்கள் அமைந்துள்ளன. முருகப்பெருமானின் மீது ஐந்து தலைநாகம் படம் எடுத்து குடைபடித்துக் கொண்டிருப்பதுபோல, பித்தளையினால் செய்து பொருத்தியுள்ளனர்.

சுயம்புலிங்கமான சுப்பிரமணிய சுவாமியைச் சுற்றிலும் கவசம் அமைக்கப்பட்டு உள்ளது. கருவறையின் முன்னுள்ள மகா மண்டபத்தின் வடக்கில் தெற்கு நோக்கியவாறு அமைந்தசன்னதியில் உலாத் திருமேனியாக சிவசுப்பிரமணிய சுவாமியும் வள்ளி தெய்வானை நாச்சியார்களும், விநாயகர், சுமந்தரீசுவரர், வீரபாகு, அஸ்திரதேவர் ஆகியோரும் எழுந்தருளியுள்ளனர். மகா மண்டபத்தின் முன்புறம் கொடிமரமும் மயிலும் பலிபீடமும் அமைந்துள்ளன.

இக்கோயிலில் சிவாச்சாரியாரால் நான்கு கால பூஜை சிறப்புடன் நடைபெறுகிறது. ஆடிக் கிருத்திகை,தைமாத கிருத்திகை முதலியன சிறப்புடன் கொண்டாடப்படுகின்றன.

இந்த மலையின்மீது அழகிய சிறு குளமும், வற்றாத சுனைகளும் உள்ளன. மிகவும் சிதைந்த நிலையில் அழகிய மரச் சிற்பங்கள் கொண்ட தேர் உள்ளது. நாக வடிவில் முருகப்பெருமான் தோன்றித் தன்னை வெளிப்படுத்திய இடமாதலின் நாகதோஷங்கள், ராகு, கேது கிரகங்களால் ஏற்படும் தொல்லைகள் புத்திர தோஷங்கள் முதலியவை விலக இக்கோயிலுக்கு வந்து அன்பர்கள் வழிபாடு செய்கின்றனர்.

திருவண்ணாமலைக்கு அருகில் மோட்டூருக்கும் - வில்வாரணிக்கும் இடையில் இந்த நட்சத்திரக் கோயில் அமைந்துள்ளது.ஃ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்னை முருகாசிரமத்துள் நாகபடமேல் வளரும் அழகன்

திருமுருகப்பெருமான் பெரும் பாம்பின் மையத்தில் எழுந்தருளி அருள் பாலிக்கும் தலங்களில் ஒன்று சென்னை மேற்குமாம் பலத்தில் அமைந்துள்ள ஓம் முருகாஸ்ரமம் ஆகும். இங்கு மூலத்தானத்தில் அறுகோணப் பீடம் அமைந்துள்ளது. இதன்மீது உடலைச் சுருட்டி ஆசனமாகவும், ஐந்து தலைகளையும் நன்கு விரித்துக் குடையாகவும் கொண்ட மகாநாகத்தின் சுதை வடிவம் அமைந்துள் ளது. இதன் வால் பின்புறமுள்ள இருவாட்சி மரத்தினைச் சுற்றியவாறு பூமியில் படிந் துள்ளது.

இந்த மகாநாகத்தின் மையத்தில் பெரிய லிங்கம் போன்ற பிரபா மண்டல அமைப்பும் அதன் நடுவில் ஓம் எனும் எழுத்தில் ஒளிப்ப வனாக மயிலினைத் தழுவி மகிழும் இளங் குமரன் சிறப்புடன் காட்சியளிக்கின்றார்.

இங்குள்ள பாம்பு அகண்ட சச்சிதானந் தப் பந்துவையும் அதனின்று தோன்றும் ஓங் காரம் நாத வடிவாகவும் அந்த நாத வடிவான ஓங்காரத்தின் உட்பொருளாய், உருவம் தாங்கி வந்து அன்பர்களுக்கு அருள்பவனாக என்றும் மாறாத இளமையுடன் முருகன் அருள்பாலிக் கின்றார் என்பதையும் குறிக்கிறதென்று இந்தத் திருவடிவத்திற்குத் தத்துவ விளக்கம் கூறுவர்.

அறுகோணவடிவில் அமைந்த ஆலயத் தில் ராஜகம்பீரனாக முருகப்பெருமான் பக்தர் களுக்குக் காட்சியளிக்கின்றார்.

இந்த ஓம் முருகாஸ்ரமத்தில் சிறப்புடன் பூஜை திருவிழா முதலிய கைங்கர்யங்களைச் சிறப்பாக நடத்திவரும் ஸ்ரீ சங்கராநந்த சுவாமிகள். இவர் முன்பு சொன்ன (பக்கம் 27) எலத்தூர் நட்சத்திரக் கோயில் ஸ்ரீ சுப்பிர மணியரின் அருட்காட்சி பெற்றவர்.

முருகப்பெருமானுக்குரிய அனைத்து விழாக்களும் இங்கு மிகச் சிறப்பான முறை யில் கொண்டாடப்படுகின்றன. பங்குனி உத்திரத்தில் வள்ளி திருமணப் பெருவிழா வும், ஐப்பசி மாத கந்தர் சஷ்டிப் பெருவிழா வினையொட்டித் தெய்வானைத் திருமண மும் மிகச் சிறப்புடன் கொண்டாடப் படுகின் றது. இந்த ஆலயத்தில் நடைபெறும் சிறப்பு மிக்க அலங்காரங்கள் கண்ணையும் கருத்தை யும் கவர்வதாக அமைகிறது. கிருத்திகை தினங்களில் ராஜ அலங்காரமும் சஷ்டி தினங் களில் விபூதி சந்தன அலங்காரங்களும், சிறப்பு மிக்க விசேடங்களில் அந்தந்தத் திரு நாளுக்கேற்ப அலங்காரங்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. எடுத்துக்காட்டாக அநுமத் ஜெயந்தி நாளில் முருகனை அனும ராகவும் மார்கழி மாதக் கூடாரவல்லி நாளில் ஆண்டாளாகவும் அலங்கரிப்பது காண்ப தற்கு இனிய காட்சிகளாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாகம் ஆட மகுடி ஊதும் முருகன்

மலையகங்களில் வாழ்ந்த மக்களான குறவர்களுக்கு மிகுந்த தொல்லை கொடுத்தவை பாம்புகளாகும். இரவில் வேட்டையாடி வாழ்வு நடத்திய அவர்களுக்குப் பாம்பினால் ஏற்பட்ட இழப்புகள் ஏராளமாகும். மற்ற விலங்குகளை அதன் வரவை உணர்ந்து வேட்டையாட முடியும்.

ஆனால் பாம்புகளை அப்படி வேட்டையாட முடிவதில்லை. அது எப்போது எங்கிருந்து வெளிப்படும், எப்போது கடிக்கும் என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. எனவே பாம்புத் தொல்லைகளில் இருந்து தம்மைக் காத்துக் கொள்ளத் தமது குலதெய்வமான முருகனை அவர்கள் வழிபட்டனர்.

முருகனே, மகா நாகமாகி பாம்புகளின் தொல்லைகளில் இருந்து அவர்களைக் காத்தான். அடங்காத பாம்புகளைப் பாம்புப் பிடாரனாக வந்து பிடித்து அடக்கினான் அல்லது அழித்தான் என்று நம்பினர்.

இப்படி பாம்பாட்டியாக வடிவம் கொண்ட முருகனைக் குறவர்கள் போற்றி மகிழ்ந்தனர். இந்நிலை வளர்ந்து அவர்கள் காடுகளை அழித்து அவற்றை விளைநிலங்களாக மாற்றி வேட்டையாடும் வாழ்விலிருந்து தமது வாழ்வை விவசாயியாக மாற்றிக் கொண்ட போதும் தொடர்ந்தது.

குறிப்பாக, மலைநாடான கோவை மாவட்டங்களில் பாம்புக் கடியும் அதனால் இறப்பும் அதிகமாகியது. எனவே, முருகனைப் பாம்பாட்டியின் வடிவில் வழிபடும் வழக்கம் மிகுதியாயிற்று.

பல இடங்களில் முருகனைப் பாம்பாட்டியின் வடிவில் செய்துவழிபடத் தலைப்பட்டனர். எடுத்துக்காட்டாக கோபிசெட்டிப் பாளையத்தை அடுத்த பருவாச்சி என்னும் கிராமத்தை ஒட்டி ஆதிநாளில் வீரர்களுக்கு எடுக்கப் பெற்று இந்நாளில் முருகன் கோயிலாக விளங்கும் ஒரு கோயிலைக் காண்கிறோம்.

இதில்ஐம்பதுக்கும் மேற்பட்ட பாம்பாட்டிகளின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் பத்தடிக்கும் குறையாத உயரமுடையன. கோயிலின் வெளிப் பிரகாரத்தில் சுற்றிலும் ஒரு மீட்டர் உயரமுடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேடை அமைக்கப்பெற்று வரிசையாக இவை நிலைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பாம்பாட்டி சிலைகள் மண்ணால் செய்து, சுட்டு வண்ணம் தீட்டப்பட்டவைகளாகவும் சுண்ணாம்புச் சாந்தால் கட்டப்பட்டவைகளாகவும் செங்கல் சிமெண்ட் கொண்டு கட்டப்பட்டவைகளாகவும் விளங்குகின்றன. இவ்வளவு பாம்பாட்டி சிலைகள் ஒரே இடத்தில் காண்பது அரிதாகும். இவ்வகையில் இது குறிப்பிடத்தக்க கோயிலாகும்.

இக்கோயிலின் முகப்பில் முருகன், வள்ளி, தெய்வயானையருடன் நிற்கும் காட்சி சுதை வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. கருவறையில் வேங்கைமரத்தால் செய்யப்பட்டுள்ள உலாத்திரு மேனிகள் உள்ளன. இங்கு கார்த்திகை தீபம், மார்கழி மாத அதிகால பூசை ஆகிய சிறப்பாக நடைபெறுகின்றன. இத்தகைய கோயிலைத் தமிழகத்தில் வேறெங்கும் காண இயலவில்லை.

தொண்டைநாடு, நடுநாடு எனப்படும் செங்கல்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு மாவட்டங்களில் பாம்பாட்டியாக வரும் முருகனின் வழிபாடு அதிக அளவில் இல்லை என்றாலும், முருகன் ஆலய விமானங்களில் அவன் பாம்பாட்டியாக மகுடி ஊதுதல், அவன் முன்பு கூடையிலிருந்து வெளிப்படும் பாம்பு ஆகிய சிலைகள் அமைக்கப் பட்டுள்ளதைக் காண்கிறோம்.

(முருகன் ஆலய விமானங்களில் அமைக்கப்படும் சுதைச் சிற்பங்களில் முருகன் பாம்பாட்டியாக மகுடி ஊதி பாம்பை அடக்கும் சிற்பம் தனிச்சிறப்புடன் அமைக்க வேண்டியது முறையாகும்.

அனந்த சுப்பிரமணிய விரத பூஜை

முருகப்பெருமானோடு நாகங்களை இணைத்து வழிபடுவதே அனந்த சுப்பிரமணிய விரத பூஜையாகும்.

இதில் பெரிய ஆமை பீடமாக விளங்குகின்றது. (சிலர் ஆமைக்குப் பதில் பெரிய தவளை பீடமாக இருப்பதாகக் கூறுவர்.) சுப்பிரமணிய யந்திர பூஜையில் பீடத்தின் அடியில் மண்டூகாய நம: என்று தவளை போற்றப்படுவது இங்கு எண்ணத்தக்கதாகும்.

இந்த பீடத்தின் மீது எட்டுத் திக்கிலும் எட்டு நாகங்கள் அமைகின்றன. இது சர்ப்ப பீடம் என்று அழைக்கப்படும். இந்த எட்டு நாகங்கள் முறையே வாசுகி, அனந்தன், தட்சன், சங்கபாலன், குளிகன், பத்மன், மகா பத்மன், கார்க்கோடகன் என்ற அழைக்கப் படுகின்றன.

அதன்மீது மகாபீடத்தைச் சுற்றி எண்ணிலாத சர்பங்கள் தம்தேவியருட்ன் எழுந்தருளி முருகப்பெருமானை வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கார்த்திகை மாத சஷ்டி நாளில் பாம்புகளுடன் கூடியவராக விளங்கும் முருகப் பெருமானை வழிபடுபவர்கள் சிறந்த புதல்வர்களைப் பெற்றுஅளப்பரிய செல்வங்களைப் பெறுவர்.

பாம்புகள் தவளைகளுக்குப் பகையானாலும், தவளையால் தாங்கப்பட்ட பாம்புகள் மீது ரத்னமயமான சிம்மாசனத்தில் பெருமான் விளங்குகின்றார் என்பது இறைவன் நிழலில் எல்லா உயிர்களும் சமதன்மையைப் பெறுகின்றன என்பதைக் குறிக்கின்றது என்கின்றனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸர்ப்பக் காவடி பாம்புக் காவடி

முருகப்பெருமானுக்குரிய நேர்த்திக் கடன் அல்லது காணிக்கைகளில் ஒன்றாகக் காவடி எடுப்பது இருந்து வருகிறது.

பால், பன்னீர், தேன், சர்க்கரை, இளநீர், சந்தனம் போன்ற அபிஷேகப் பொருட்களைக் காவடிகளில் கட்டிச் சுமந்து வந்து பிரார்த்தனைகளைச் செலுத்துகின்றனர். அப்பொருட்களால் முருகனுக்கு அபிஷேகம் செய்து மகிழ்கின்றனர்.

அபூர்வமாக அன்பர்கள் சேவல், பாம்பு, மீன் முதலியவற்றையும் காவடிகளில் கட்டி வந்து காணிக்கை செலுத்துகின்றனர். இவற்றைக் குக்குடக்காவடி, சர்ப்பக் காவடி, மச்சக்காவடி என்று அழைக்கின்றனர். இங்கு சர்ப்பக் காவடி பற்றிய செய்திகளைத் தொகுத்துக் காணலாம்.

மிகுந்த சீலமும், பக்தியும் கொண்ட முருகபக்தர்கள் சர்ப்பக்காவடி எடுப்பதாக வேண்டிக்கொள்வர். அவர்கள் விரதமிருந்து ஊருக்குப் புறத்தே அமைந்திருக்கும் குளத்தில் நீராடி, நீண்ட வாளை ஏந்தி அருகில் உள்ள வனத்திற்குச் சென்று நடனமாடி முருகனை வணங்குவர்.

அப்போது சில பாம்புகள் தாமாகவே வந்து அவர்கள் முன் வந்து நிற்கும். அவர்கள் தன்னை மறந்த நிலையில் ஆடுவதால் அவர்களுடைய வாளில்பட்டு அவை வெட்டுண்டு பல துண்டுகளாகும். பின்னர் அன்பர்கள் அவற்றின் வெட்டுண்ட உடல்களைத் திரட்டிப் புதிய மண்கலயத்தில் வைத்துக் காவடியாகக் கட்டி எடுத்துக் கொண்டு பழனிமலைக்கு எடுத்துச் செல்வர். அங்கு முருகன் சந்நிதியில் வைத்து வழிபட அந்தப் பாம்புகள் மீண்டும் முன்னது போலவே ஒட்டி உயிர் பெறும். பின்னர் அவை அங்குள்ள மலைக் குகைகளுக்குச் சென்று வாழும் என்பர்.

இவ்வாறு பாம்புகள் தாமே முன்வந்து அன்பர்களின் வாளால் வெட்டுண்டு இறந்து, காவடியில் பயணித்து, பழனியில் உயிர் பெற்று வாழ்ந்த கதையைப் பழனிமலையில் ஏராளமாகக் கேட்கலாம்.

சர்ப்பக் காவடி எடுப்பது மிகக் கடுமையான விரதங்களில் ஒன்றாகும். இப்படி ஒருமுறை காவடி எடுத்தவர்கள் பாம்புகளின் வாயைக் கட்டும் கலை கை வரப்பெறுவார்கள் என்றும், பாம்பு, கடித்துத் துன்புறுபவர்கள் பல மைல் தூரத்தில் இருந்தாலும், அவர்களைத் தமது எண்ண அலைகளாலேயே குணப்படுத்தும் வல்லமை பெறுவார்கள் என்றும் கூறுகின்றனர்.

மேலும் சிலர் பாம்புகளைப் பிடித்து மந்திரித்துவிட்டால் அவை இறந்தது போலாகி விடுமென்றும் அவற்றைக் காவடியில் கட்டி முருகன் சந்நிதியில்விட அவை உயிர்பெற்று ஓடும் என்றும் கூறுகின்றனர்.

மேலும் அந்நாளில் சில வீடுகளிலும், மனைகளிலும் வயல்களிலும் வயதால் மூத்த பாம்புகள் வசிக்கும் என்பர். இவற்றை மனைப் பாம்புகள் என்பர். இவை யாரையும் துன்புறுத்தவில்லை என்றாலும், இவை அடிக்கடி கண்ணில்படும்போது நமக்கு அச்சமாக இருக்கும். இவற்றை அடித்துக் கொன்றுவிட்டால் வம்சம் விருத்தியாகாது போய்விடும் என்று நம்புகின்றனர். எனவே, இத்தகைய பாம்புகளைப் பிடித்துக் காவடியில் கட்டிப் பக்தியுடன் எடுத்துச் சென்று பழனியில் விட்டு விடுவது வழக்கமாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(இது கோவை மாவட்டத்தில் பயணம் செய்தபோது ஒரு வயதானவர் சொல்லக் கேட்டது.)

இந்நாளில் சர்ப்பக் காவடிகள் எடுக்கும் வழக்கம் பரவலாக இல்லாததால் அவற்றைப் பற்றிய முழுச் செய்திகளை அறிய முடியவில்லை.

குன்றக்குடி சர்ப்பக்காவடி

குன்றக்குடி ஆலயத்தில் சர்ப்பக் காவடி எடுக்கும் வழக்கம் உள்ளது. ஆனால் இதற்கு முருகனே உத்தரவு கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

முருகன் சில ஆண்டுகளுக்கு ஒருமுறை யாராவது ஒருவருக்கு சர்ப்பகாவடி எடுத்து வரும்படி கனவில் தோன்றி உத்தரவு கொடுப்பாராம். அந்தக் கனவில் ஓர் இடத் தைக் குறிப்பிட்டு, அங்கு சென்று தங்கியிருக்கும்படிக் கூறுவாராம்.

அதன்படி அவர் அங்கு சென்று தங்கியிருக்க வேண்டும். அப்படித் தங்குபவர் சுடாத பானையொன்றை வைத்திருப்பார். ஓரிரு நாட்களிலோ ஓரிரு வாரங்களிலோ ஒரு பெரிய பாம்பு அவ்விடத்திற்கு வந்து விரதமிருப்பவர் மீது புரண்டுவிட்டு அவர் வைத்துள்ள சுடாத பானையில் சென்று தங்கி விடுமாம்.

இதன் பிறகு ஊரார்கள் கூடி மேளம் முழங்க அவருக்குச் சிறப்பு செய்வர். அதன் பிறகு அனைவரும் கூடிச் சூழ்ந்து வர, அந்தப் பானையை அவர் காவடியாகச் சுமந்து வந்து மலைக்குச் சென்று வழிபடுவார். அன்று முருகனுக்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் செய்யப்படும். பின்னர் காவடியாகக் கொண்டு வந்த பாம்பு உள்ள கலயத்தை மலையடிவாரத்திற்கு எடுத்துச் சென்று அங்குள்ள தேனாற்றுநாதர் என்னும் சிவன்

கோயிலுக்கு அருகில் உள்ள புதரின் பக்கம் வைத்து வழிபடுவார்களாம்.

அப்போது அதனுள் உள்ள பாம்பு அங்கு நன்றாக படம் எடுத்து ஆடிவிட்டுப் பின்னர் விரைந்து சென்று புதருக்குள் ஓடிவிடுமாம். இப்படி சர்ப்பகாவடி எடுத்து வரும் வழக்கம் நீண்டகாலமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இத்தகைய காவடி எடுத்ததாக அன்பர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

திருச்செந்தூரிலும் சர்ப்பக் காவடிகள் எடுக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது.

திருச்செந்தூர் ஆலயத்தில் சர்ப்பக் காவடி செலுத்தப்படுகிறது. அதுபற்றி டாக்டர். ந.கல்யாணசுந்தரம் அவர்கள் எழுதித் திருக்கோயில் வெளியீடாக வெளி வந்த திருச்செந்தூர் முருகன்கோயில் வரலாறு என்னும் நூலில் இடம் பெற்றுள்ள சர்ப்பக் காவடி பற்றிய குறிப்புக்களை இங்கே காணலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருச்செந்தூர் சர்ப்பக் காவடி

சர்ப்பக்காவடி எடுப்பவர் கடும் விரதம் இருப்பர்.காட்டினுள் (ஊருக்கு வெளியே) தங்கி ஆறு நாட்கள் உணவருந்தாமல் முருகனை வேண்டி உருகி நிற்பர். ஆறாம்நாள் அவர்கள் கனவில் முருகன் தோன்றி ஓர் இடத்தைக் குறிப்பிட்டு அவ்விடத்திலுள்ள பாம்பைக் கொண்டு வருமாறு கூறுவார். விரதமிருப்பவர் தாரை தப்படை ஒலி முழங்க அவ்விடம் சென்று பச்சை மண் கலத்துள் பாம்பு அடைத்துக் (பாம்பு தானாகவே வெளியே வந்து மட்கலத்துள் புகும் என்பர்) காவடியில் கட்டிக் கொண்டு வருவர். வள்ளியம்மன் குகை அருகில் மட்கலத்தைத் திறந்து விடுவர். பாம்பு வெளியேறி ஓடும். இக்காவடி அரிதாகவே (ஆண் டிற்கு ஒன்று அல்லது இரண்டு) வருகின்றது.

முருகன் அன்பர்களிடம் சர்ப்பக் காவடியைக் கேட்டுப் பெறும் காலங்களில் பயிர் விளைச்சல் அதிகமாக இருக்கும் என்றும், தனதானிய சம்பத்து மேலாக இருக்கும் என்றும், குழந்தைகளின் பிறப்பு விகிதம் அதிகமாக இருக்குமென்றும் நம்பப்படுகிறது.

மயில் வேலி

பழனிமலை ஆண்டவருக்குச் சர்ப்பக் காவடி எடுப்பதே அதிக அளவில் இருந்த தென்று கூறுவர். இப்படி பழனிமலைக்கு காவடியாகக் கட்டிக்கொண்டு வரும் பாம்புகள் அம்மலையை விட்டுச் சென்று விடாதிருக்கும் அம்மலையினைச் சுற்றி மயில் மந்திரவேலி அமைத்து, அதனை உணர்த்தும் வகையில் நான்கு திக்கிலும் மயில் வடிவங்களை அமைத்துள்ளனர் என்பர்.பழனி மலையைச் சுற்றி நான்கு திக் கிலும் நான்கு மயில்மண்டபங்கள் உள்ளன. இந்த மயில் களுக்கு அணிவிக்கப்பட்டுள்ள சேணங்கள் அழகானவை. இவை ஒப்பற்ற கலைப் படைப்பாகத் திகழ்கின்றன.



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாம்பன் சுவாமிகள் அருளிய திருவலங்கற்றிரட்டில் இடம் பெற்றுள்ள

துவித நாக பந்தம்

நெட்டெழுத்துச் செய்யுளும், மாலை மாற்றும், திரபங்கியும், துவிதநாகபந்தமும் ஆகிய பாடல்

தமிழில் வழங்கும் பாடல் வகைகளில் சித்திரக்கவியும் ஒன்றாகும். புலவர்கள் தாம் விரும்பிய சித்திரத்தை வரைந்து அதில் இடப்பட்டுள்ள கட்டங்களில் எழுத்துக்களை நிரம்பி, அந்த எழுத்துக்களை முறையாக இணைத்துப் படித்தால் செய்யுள் வருவது போலப் பாடுவதே சித்திரக் கவியாகும். திருஞானசம்பந்தர் இரதபத்தம், சக்ரமாற்று, கோமுத்திரி, கூடற்சதுக்கம் போன்ற சித்திரக் கவிகளைப் பாடியுள்ளார். இத்தகைய அலங்காரப் பாடல்களை முதலில் பாடிய வரும் அவரே. அவரைப் பின்பற்றிப் பற்பல புலவர்கள் பலவகையானச் சித்திரக் கவி களைப் பாடித் தீட்டியுள்ளனர்.

பின்னிக் கொண்டுள்ள இரண்டு பாம்பு களின் வடிவங்களைத் தீட்டி, அதன் உடலில் தனியாகவும், இரண்டு பாம்புகளின் உடல் சந்தித்துக் கொள்ளும் இடங்களிலும் கட்ட மிட்டு, அதில் எழுத்துக்களை எழுதி, இப் பாடலை அமைக்கலாம். பாம்புக்கொரு பாடலாக எழுதி இரண்டு பாம்பின் உடலி லும் இந்த இரண்டு பாடல்களை எழுதிப் படிக்க முழுப்பாடல் கிடைக்கிறது. இரண்டு இணைந்த பாம்பின் உடலில் எழுதிப் படிப்பதால் இது துவிதநாகபந்தம் எனப் பட்டது. இது வஞ்சித்துறை என்னும் செய்யுள் வகையைச் சார்ந்ததாகும்.

முதல் சிறப்பு, இதிலுள்ள எழுத்துக்கள் யாவும் நெட்டெழுத்துக்கள், குற்றெழுத்துக் களோ, தலையில் புள்ளிகளைக் கொண்ட மெய்யெழுத்துக்களோ இதில் இடம் பெறவில்லை. அதனால் இது நெட்டெ ழுத்துச் செய்யுள் எனப்படுகிறது.

இரண்டாவது சிறப்பு .. முதல் இரண்டு அடிகளும் தனித்தனியே மாலை மாற்று என்னும் வகையில் அமைந்ததாகும். இரண்டு வரிகளையும் பின்னாலிருந்து (வலமிருந்து இடமாகப்)படித்தாலும் அதே தொடரே வருவதாக அமைந்துள்ளதாகும். அதை யொட்டி மாலைமாற்று என்னும் சிறப்பைப் பெற்றது.

இத்தகைய பாடல்களைப் பாடுவது எளிதல்ல. ஆறுமுகப் பெருமானின் அருளும் அன்னைத் தமிழ்மகளின் அருளும் நிரம்பப் பெற்றவர்களே பாட முடியும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாம்பன் சுவாமிகள் அருளிய

திருவலங்கற்றிரட்டில் இடம் பெற்றுள்ள

துவித நாக பந்தம்



வஞ்சித்துறை

சேயா சேயாதே தேயா சேயாசே
மாயா மாயாவா வாயா மாயாவா
வாயா மாவாயா மாயா சேமாசே
யோயா நேயாவோ யாயே தேயானே

இதனில் 1, 2-அம் அடிகள் தம்மின் மாலைமாற்றாம். நான்கடிகளை முறையே இரண்டிரண்டு சீராகப் பிரித்துப் படிக்கும் போது பாம்புக்கொரு பாட்டாகப் பொருளோடு முடிகின்ற மேற்காட்டிய மோனை பழையா விரண்டு வஞ்சித் துறைகளாகும். ஆகவே இவ்விருத்தம் குழிப்புடைய நெட்டெழுத்துச் செய்யுளும் மாலைமாற்றும் திரிபங்கியும்,துவிதநாகபந்தமுமாயிற்றென்க.

இதன்பொருள் : சேயாசேயா சேயவனே சேயவனே. தேகடவுளே தேய் ஆசு = (எனது) சிறுமையைக் கெடு. ஆசுஏமா = சிறுமைக்கு நமனாயுள்ளானே யாமாயா = (சத்தி ரூபமாய்ச் சுருங்கியிருந்து) வியக்திரூபமாக விரியும் மாய மாயைக் கதிபதியே வா = (என்முன்) வந்த ருள்வாயாக. வாயாமாயாமா = (உயிர்களோடத்துவிதமாயிருந்து அவைகட்குக்) கிட்டாத மகாசிராத்திரியத்தனே, வாயா=உண்மைப் பாட்டுடையானே, மாவாயா = சிறந்தமாவாய் = சிறந்த வாக்குடையானே, மாயா = மாய வித்தைகளுடையானே, சேமா, சேம முடை யானே, ஓயாய ஏது = (என் கண்ணதாய) ஏதெனுங் குற்றத்தை யொழித் தருள் ஆள் = ஆண்டருள் என்றபடி, எயிரண்டும் அசை.

இதன் திரண்ட கருத்து : சேயவனாகிய செவ்வேளே, கடவுளே எனது சிறுமைகளைக் கெடுப்பாய்.சிறுமைகளுக்கு எமனாகி வியக்திருபக விரியும் மாய மாயைக்கு அதி பதியே எனக்கு முன்னே வந்தருள் வாயாக. மகாசிராத்திரி அத்தனே உண்மைப் பாடுடையவனே. சிறந்த வாக்குடையவனே சிறப்பு உடையவனே, இளநலம் உடையவனே அன்பர்களிடம் ஒழியாத நேயமுடையவனே என்னிடம் உள்ள குற்றங்களை ஒழித்து எம்மை ஆண்டருள்வாய். ❀

தமிழில் உள்ள பாடல் வகைகளுள் ஒன்றான சித்திரக்கவியில் நாகபந்தம் தனியிடம் பெற்றுள்ளது. மேலே குறிக்கப்பட்டுள்ள படத்தில் உள்ளது இரண்டுநாகம் பின்னிக் கொண்டுள்ள துவித நாகபந்தமாகும். மேலும், சதுர்த்த நாகபந்தம், அஷ்டநாகபந்தம், சோடசநாக பந்தம் எனப் பலவகைகள் உள்ளன. இவை முறையே நான்கு, எட்டு, பதினாறு பாம்புகள் பின்னியது போன்ற வடிவுடையவையாகும். ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாம்பு காட்டியபஞ்சவேல் முருகன் கோயில்

முருகன் பாம்பு வடிவில் தோன்றி தம்மை வெளிப்படுத்திக் கொண்டு கோயில் கொண்ட வரலாறுகள் தமிழகத்தில் பல இடங்களில் உள்ளன பாம்பு வடிவில் தோன்றித் தமது சக்திவேலை வெளிப் படுத்திக் கோயில் கொண்ட அதிசயத்தைக் கோவையின் அருகிலிருக்கும் பூராண்டான் பாளையம் பஞ்சவேல் முருகன் ஆலய வரலாற்றில் காண்கிறோம்.

கோவையிலிருந்து 30 கி.மீ. தெற்கில் பூராண்டான்பாளையம் உள்ளது. இங்கு பஞ்சவேல் பரமேசுவரர் என்னும் ஆலயம் உள்ளது. இக்கோயிலின் கருவறையில் ஐந்து வேல்களை நிலைப்படுத்தி வழிபடுகின்றனர்.இக்கோயில் தோன்றிய வரலாறு பற்றிய செய்திகளைச் சுருக்கமாகக் காணலாம்.

இந்தக்கோயில் வரலாற்றில் முருகன் பாம்பு வடிவில் தோன்றி வேலைக் காட்டியது முருகன் அருள்பெற்ற அடியவர் மழுவெடுத்துச் சத்தியம் செய்தது முதலிய செய்திகள் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்பாக இப்பகுதியில் பெரிய பண்ணையார் வசித்து வந்தார். அவரிடம் ஏராளமான பசுக்கள் இருந்தன. அவை யாவும் உயர்ந்த ஜாதிப் பசுக்களான இருந்தன. ஏராளமாக பால் கறந்தன. பண்ணையார் அந்த மாடுகளை மேய்க்க ஒரு சிறுவனை நியமித்திருந்தார். அவன் மிகுந்த யோக்கியவான். பசுக்களின் மீது அன்பு கொண்டவன். அவனது பெயர் முத்துக்குமாரசுவாமி என்பதாகும்.

ஒரு சமயம் கூட்டத்திலிருந்த சில பசுக்கள்மாலையில் பால் கறக்கவில்லை. பசுக்கள் ஆரோக்கியமாக இருந்த போதிலும், நன்கு மேய்ந்து கொழுத்திருந்த போதிலும், மாலையில் அவை பாலின்றி வெற்று மடியுடன் திரும்பின.

பண்ணையாருக்குப் பையன் பாலைக் கறந்து விற்று விடுகிறானோ என்ற சந்தேகம் உண்டாயிற்று. பையனைப் பலவாறு இதமாகவும், பதமாகவும் கேட்டுப் பார்த்தார். பையனிடமிருந்து தெரியவில்லை என்ற பதிலே திரும்பத் திரும்ப வந்தது.

அந்தப் பையன் தெய்வத்தின் ஆளுகைக்கு உட்பட்டு படிப்படியாக தன்னை அறியாமலேயே சித்த நிலையை அடைந்திருந்தான் என்பதை எவரும் அறிந்திருக்கவில்லை.

பண்ணையார், ஊர்மக்களைத் திரட்டினார். இரும்புக் கம்பியைப் பழுக்கக் காய்ச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சினார். பையனிடம் அதைத் தொட்டுச் சத்தியம் செய்யும்படிக் கூறினார்.

முத்துக் குமரன் தயங்கவில்லை தானே முன்வந்து பழுகக் காய்ச்சிய அந்த இரும்புக் கம்பியை எடுத்தான். கனன்று காய்ந்து சிவந்து ஜொலித் துக் கொண்டிருக்கும் அந்தக் கம்பியை வளைத்துமாலைபோல் போட்டுக் கொண்டான். அதைப் பிடித்துக் கொண்டு "அந்தப் பசுக்கள் பால் கறக்காததற்கான காரணம் எதுவும் எனக்கு தெரியாது," என்று சத்தியம் செய்தான். அதைக் கண்ட எல்லோரும் அதிசயித்தனர், அஞ்சினர்.

பண்ணையார் பயந்தேபோனார். முத்துக் குமரனை முருகனாகவே எண்ணி வணங்கி னார். அன்று மேய்ச்சலுக்குப் போன மாடுகள் எதுவுமே திரும்பவில்லை. முத்துக் குமரனி டம் வந்து வணங்கி மாடுகள் கிடைக்கும் படிச் செய் என வேண்டினார். முத்துக்குமரன் எதுவும் பேசவில்லை. தம் மாடு மேய்க்கும் கோலைக் காற்றில் வீசினார். மாடுகள் திரும்பிவிட்டன.

அவற்றின் மடி நிறைந்திருந்தது. அப் போது முருகன் தனது சக்திவேல் புற்றில் இருப்பதாகவும், அங்கு செல்லும் பசுக்கள் தாமாகவே பால் பொழிவதாகவும் அருள் வாக்கு வந்தது. குமாரசுவாமியுடன் மக்கள் திரண்டு சென்று மாடுகள் பால் பொழியும் புற்றைக் கண்டுபிடித்து அதைப் பால்விட்டுக் கரைத்து அதிலிருந்த வேலை எடுத்தனர். முத்துக் குமாரசாமி அந்த வேலை நட்டு வழி பட்டு வந்தார்.

குமாரசாமியை மக்கள் தெய்வமாகவே போற்றினர். அவரும் அவர்களுடைய மனக் கவலையை மாற்றினார். நோயைத் தீர்த்து வைத்தார். வேலை வழிபடுவதே அவரது வேலையாக இருந்தது. அவர் ஒரு நாள், "இந்த வேலை வழிபட்டு வாருங்கள் உங்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும்," என்றார் ஒருநாள் சமாதியாகி விட்டார். மக்கள் அவரது ஆணைப்படியே அவரது உடலைச் சமாதிப்படுத்தினர். தொடர்ந்துஅந்த வேலை யும் அவரது கோலையும் வணங்கி வந்தனர். அவரது மாடு மேய்க்கும் கோலையும் மந்திரக் கோலாகவே எண்ணிப் போற்றினர்.

காலப்போக்கில், மக்கள் பழைய கதைகளை மறந்துவிட்டனர். சமாதியும், வேலும் கோலும் வழிபாடின்றிப் போய் விட்டன.

குமாரசாமியார் அன்பர் ஒருவர் கனவில் தோன்றி வேலை மீண்டும் பிரதிஷ்டை செய்து வணங்கும்படிக் கூறினார். கனவில் வேலும் அதைச் சுற்றிக் கொண்டு இருக்கும் பாம்பும் காட்சியளித்தன. அந்த அன்பர் கனவில் தோன்றிய இடத்தைத் தேடிக் கண்டு பிடித்தார். அங்கு அவர் சென்ற போது கோயில் வளாகத்தில் பாம்பு காட்சி தந்தது. ஆனால் வேலைக் காண முடியவில்லை. அன்பர் வருந்தினார். முருகன் பாம்பு வடி வில் தோன்றி வேலிருக்குமிடத்தைக் காட்டி விட்டு மறைந்தார். புதையுண்டு கிடந்த வேலை எடுத்தார். பலவித எதிர்ப்புக் களை யும் மீறி அங்கே பிரதிஷ்டை செய்தார்.

முத்துக் குமாரசாமியார் கனவில் அறி வுறுத்திய வண்ணம் சக்திவேலும், மேலும் நான்கு வேல்களையும் நட்டு ஐந்து வேல் கோயி லாக அமைத்தார். இதில் நடுவில் பழைய சக்திவேலும், இருபுறமும் இரண்டி ரண்டாக நான்கு வேல்களும் இடம்பெற்றன.

முருகனும் அவனது அடியவர் முத்துக் குமாரசாமியாரும் அவ்விடத்தில் இருந்து அன்பர்களுக்கு அருள்புரிந்து வருகின்றனர்.

பஞ்சவேல் கோயில் வரலாறு அற்புத வரலாறு அன்பர்களுக்குக் கருணைபுரியும் ஆண்டவன் வரலாறு. ❀

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாகமும் மலைகளும்

குமரனடியார்கள், முருகனின் வாகனமான மயில், மலை வடிவம் கொண்டு முருகனைத் நோக்கித் தவம் செய்வதாகவும், அதையொட்டி அம்மலைகள் மயிலம், மயூரகிரி என்ற பெயரில் விளங்கி வருவதாகக் கூறுகின்றனர். அம்மலைகள் மீது முருகன் அழகிய கோயில் கொண்டுள்ளான். முருக பக்தர்களான நாகர்களும் மலை வடிவம் கொண்டு பெருமானைத் தாங்கி மகிழ்வதை வரலாறுகள் கூறுகின்றன.

பூமியின் மீது இராட்சதப் பாம்புகள் அசையாமல் படுத்துக்கிடப்பது போலவே பெரிய மலைகள் தொடராக அமைந்துள்ளன. வளைந்து நெளிந்து பாம்புகளைப் போலவே கிடக்கும் இந்த மலைகளுக்குப் பாம்புகள் தொடர்பான சிறப்புப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. அன்பர்கள் சிறப்புப் பெற்ற இத்தகு மலைகளை நாகமலை, அரவகிரி, உரககிரி, நாகாசலம், சர்ப்பகிரி என்ற பல பெயர்களால் அழைக்கின்றனர்.

பாம்பின் பெயரால் அமைந்துள்ள மலைகள் பலவற்றின் மீதில் முருகப்பெருமான் எழுந்தருளியுள்ளதைக் காண்கிறோம்.

கோவை மாவட்டத்தில் பாம்பின் பெயரால் அமைந்த பல மலைகள் உள்ளன. இம்மாவட்டத்திலுள்ள ஊத்துக்குளி, திருச்செங்கோடு, நாகமலை, அறச்சலூர் முதலிய பல இடங்களிலுள்ள பல மலைகள் பாம்பின் பெயர்களாலேயே அழைக்கப்படுகின்றன. இவற்றுள் தலையாயது திருச்செங்கோடாகும்.

புராணங்களின்படி ஆதிசேடனே மலை வடிவம் கொண்டு திருச்செங்கோடு என்னும் மலையாக இருக்கிறார். அவனுடைய தலையின் மீது விளங்கும் நாகமணியாக அர்த்தநாரீசுவரர் விளங்குகின்றார். அந்த மணியின் சுடரொளியாக, வேலவன் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றான். அதனால் அவனைச் சிவசூடாமணியான சிகாமணி என்று போற்றுகின்றனர்.

அருணகிரிநாதர் இவ்வூர் முருகப் பெருமானை நாகாசல வேலவ நாலு கவித்தி யாக, சுரலோக சிகாமணியே! என்றும், அவன் பேரழகைக் கண்டு களிக்கத் தனக்கு நான் முகன் நாலாயிரங் கண்களைப் படைக்கவில்லையே? என்றும் பாடுகிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருணகிரிநாதர், ஞானஅனுபூதி பெற்றுப் பாடிய கந்தரநுபூதியில் நாகாசலம் என்று இத்தலம் ஒன்றை மட்டுமே குறித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

திருச்செங்கோட்டு மலை மீது செல்ல 1200 படிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மலையடிவாரத்தில் நாகர்பள்ளம் என்னும் இடமுள்ளது. மலைக்கோயிலுக்குச் செல்லும் பாதை இவ்வழியாகச் செல்லுகிறது. இப்பகுதியில் பாதையின் ஓரத்தில் அமைந்துள்ள பெரிய பாறையில் 60 அடி நீளம் கொண்ட நாகத்தின் வடிவம் செதுக்கப் பட்டுள்ளது. அந்தப் பெரிய பாம்பைச் சுற்றிலும் சிறியதும் பெரியதுமாக ஏராள மான பாம்பு வடிவங்கள் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பாம்புகளை ஒட்டிச் செல்லும் பாதையில் அமைந்துள்ள படிகளில் 60 படிகளை மக்கள் சத்தியப் படிகள் என்று அழைக்கின்றனர். முக்காலங்களில் தீராத வழக்குகளில் தீர்வு காண இப்படிகளின் துணையை நாடியுள்ளனர். இப்படிகளின் மீது நடந்து கொண்டு சத்தியம் செய்யும்படி சொல்லுவர். சம்பந்தப்பட்டவர் செய்வது பொய்சத்தியமாக இருந்தால், அவர்கள் வீடு திரும்பும் முன்னரே முருகனால் தண்டிக்கப்படுவார்கள் என்பது நம்பிக்கையாகும்.

மலைமீதுள்ள அர்த்தநாரீசுவரர் ஆலயத்திலும், ஆலயத்தின் பிராகாரத்திலும் பெரிய பாம்பு வடிவங்கள் அமைக்கப் பட்டுள்ளன. இவற்றை ஒட்டிப் பெரிய புற்று ஒன்று உள்ளது. மக்கள் இவற்றை வழிபடுகின்றனர். இப்புற்றுகளை வழிபடுவோருக்குப் புத்திர தோஷம் விலகி, நன் மக்கள் பிறப்பார்கள் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

மேலும், ஈரோடுக்கு அருகில் நாகமலை என்ற மலை உள்ளது. இதன்மீது அழகிய முருகன் ஆலயம் உள்ளது. ❀

முருகனுடன் ஆடிவரும் ஆதிசேடன்

திருவண்ணாமலையில் பிரபுடதேவ அரசனின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அருணகிரிநாதர், ஒரு கம்பத்தில் காட்சிதர வேண்டுமென்று முருகனை அழைக்கின்றார். அவனும் காட்சியளிக்க அங்கு வருகின்றான். அப்போது அருணகிரிநாதர் முருகா நீ தனியாக வரவேண்டாம். அனைத்து தெய்வங்களோடும் வந்து காட்சியளிப்பாய் என வேண்டுகின்றார். அப்படி வரும்படிக் கூறும் தெய்வப் பெயர்களின் பட்டியலில் முதலாவதாக விளங்குவது ஆதி சேடனின் பெயராகும்.

திருப்புகழில்,"அதல சேடனாராட," எனத் தொடங்கும் அப்பாடல் தனிச் சிறப்புடையதாகும். பாம்புகளை ஆட்டி மகிழும் முருகனை ஆடிவரச் சொல்லும்போது தலைமைப் பாம்பான ஆதிசேடனையும் ஆடிவரும்படிச் சொல்வது பொருத்தம்தானே. ❀

பாம்பு வடிவில் பாம்புகளோடு உறையும் பரமனின் புதல்வனான
குமாரசுவாமியின் அருளால் அன்பர்கள் யாவரும்
வம்சம் தழைத்து, வளம் பெருகி, வாழ்வில் என்றும்
இன்பமுடன் வாழ்க! வளர்க !!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த இனிய வேளையில்.....

தமிழர்தம் தனிப் பெருங்கடவுளாக விளங்குபவர் முருகப்பெருமான். அடியவர்கள் அவனை முழுதும் அழகிய குமரன் என்று போற்றுகின்றார்."குமரா நம,"என்பது முருக பஞ்சாட்சரம். அத்துடன்,"ய" என்ற என்ற அட்சரத்தைச் சேர்த்து,"குமாராய நம"என்ற பதத்தைச் சடாட்சர மந்திரமாகக் கூறுகின்றனர். குமரன் என்னும் பெயரைக் கொண்டு அவனது அருமை பெருமைகளை இயன்றவரை எடுத்துரைக்க விரும்பிக் குமார மஞ்சரிஎன்னும் தொடர்நூலைத் தொடங்கினோம். இவ்வகையில் வேல் வெற்றி வேல், மயிலும் செஞ்சேவலும், வள்ளி மணவாளன், அழகன் முருகனின் இரு பெரும் தேவியர் ஆகிய நூல்கள் வெளி வந்துள்ளன.இப்போது ஐந்தாவதாக நாக சுப்பிரமணியர் என்னும் தலைப்பில் நூல் வெளி வருகிறது. முருக வழிபாட்டில் நாகங்கள் பற்றிய செய்திகளை ஏந்தி வரும் இதைப் படித்துப் பயன் பெறத் தங்களை அன்புடன் அழைக்கிறேன்.

இந்நூல், பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பாக சிறிய அளவில் வந்தது. எனது உறவினர் திரு.மணிவாசகம் அவர்கள் தனது எழுபதாவதாண்டு நிறைவை ஒட்டி நூலொன்றை வெளியிட விரும்பினார்கள். அவ்விழாவிற்காக பழைய நூலில் உள்ள கருத்துக்களோடு புதிய செய்திகளைச் சேர்த்து வடிவிலும் வனப்பிலும் மெருகூட்டி இந்நூலை வெளியிடுகிறோம். இவ்வெளியீட் டுக்குத் தூண்டுகோலாய் இருந்த திரு. மணிவாசகம் அவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முதற்கண்எமது எழுத்துப் பணிகளுக்கு நல்லாதரவு தந்து வரும் திருவாவடு துறை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பரமாச்சார்ய சுவாமிகளைப் போற்றி வணங்குகிறேன்.

இந்த இனிய வேளையில், எனது இந்த எழுத்து மற்றும் பதிப்புப் பணிகளுக்கு நல்லாதரவு தந்துவரும் எனது அன்பிற்கினிய சகோதரி திருமதி. அனந்த லட்சுமி, அவரது கணவர் திருமிகு கயிலைமணி வரத வீரராகவன் அவர்களுக்கும், எல்.வி. ஜே. பில்டர்ஸ் உரிமையாளரும் சிவசுந்தரி அறக்கட்டளை நிறுவனரும் செயலாளரும் ஆகியதிருப்பணிச் செல்வர் அருட்பணி அரசு, திருமிகு M.V.ஜெய்சங்கர்B.E(struc)எப்போதும் துணையி ருந்து ஆலோசனைகள் வழங்கி படிகளைத் திருத்தி உதவி வரும் சித்தாந்த ரத்தினம்.டாக்டர்.விஸ்வஆறுமுகம் (மேனாள் விஞ்ஞானி,) அவர்களுக்கும் எனது பணிகளுக்கு ஆதரவாக இல்லப் பொறுப்புக்களை ஏற்று நடத்தி வரும் என்து மனைவி திருமதி.வசந்தா அவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றி மலர்களைச் சூட்டி மகிழ்கிறேன். பதிப்

புப் பணியில் துணை நிற்கும் திரு.என். முருகன், நிழற்படப் பிரதியாளர் சத்யா பிராசஸ் திரு. ராதாகிருஷ்ணன் மறு தோன்றிஅச்சு உரிமையாளர் கட்டமைப் பாளர் சண்முகா பைண்டிங் திரு.ரமேஷ் ஆகியோருக்கு எமது இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

அன்பர்கள் அனைவருக்கும் கோலக் குறவள்ளி பங்கனும், தெய் வானை காதலனுமான செவ்வேட் பரமன் அன்பர்கள் யாவருக்கும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வை அளித்து இன்பமுடன் வாழ வைக்க வேண்டுமென்று அவர் தம் பொற் பாதங்களைப் போற்றி வணங்கி வேண் டிக் கொள்ளுகிறேன்.

என்றும் சிவப்பணியில்,
மீளா அடிமை
பூசை.ச. ஆட்சிலிங்கம் (எ)
பூசை. ச.அருணவசந்தன்.

விஜயவருடம் ஆடி மாதம்
25,26(10,11-08-2013) நாகசதுர்த்தி,நாகபஞ்சமி

ஸ்ரீ நாக சுப்பிரமணியர் என்ற இந்நூலின் ஆக்கத்திற்குப் பல்லாற்றானும் துணை நின்ற கீழ்க்காணும் அன்பர்களுக்கு எமது இதயம் கனிந்த நன்றி உரித்தாகுக.

சித்தாந்த ரத்தினம் டாக்டர்.விஸ்வ.ஆறுமுகம்,
மேனாள் விஞ்ஞானி, சி.எல்.ஆர்.ஐ.கிண்டி

திரு.M.S.முத்துக்குமார முதலியார்
மதுரவாயல்

திரு.T.K. நீலகண்டன்,
அமைந்தகரை, சென்னை-29

திரு.மோகனசம்பத்.ராஜசிம்ம மகேந்திரன்
பெருமாளகரம், சென்னை

திரு.கண்ணன் ராஜலட்சுமி அப்பார்ட்மெண்ட்ஸ்,
மேற்குமாம்பலம், சென்னை-33

திரு.விஸ்வநாதன்
மேனாள் பாரத ஸ்டேட் வங்கி அதிகாரி,
சர் தேசிகாச்சாரிசாலை, மயிலாப்பூர்

திருமதி. பிரேமா வெங்கட்ராமன்
ஈஞ்சம்பாக்கம், சென்னை-41

திரு.மகாலிங்க சர்மா,
கடவர்த்தா இலங்கை,

திரு.ப. கணேச ராஜ குருக்கள்,
இலங்கை

திரு.வி. ராம்குமார் ஸ்ரீவத்சம்கோடம்பாக்கம்.

சித்தாந்த ரத்தினம் டாக்டர்.C.ரவிசங்கர்
சற்குரு பல் மருத்துவமனை, புதுவை

சிற்பஸ்ரீ.சாமி.சுப்பையா ஸ்தபதியார்
(குமாரர்)சிவஸ்ரீ.சுவாமிநாதன்(சிவா)காஞ்சிபுரம்

சித்தாந்த ரத்தினம் வி.சி.கோபிநாத்
ஸ்ரீமங்கலம், பாண்டிச்சேரி

சிவத்திரு.Dr.T.K.தேவராஜன்,
திருமழிசை

சிவத்திரு.பாலசுப்பிரமணியம்,
ஆடிட்டர், மந்தைவெளி, சென்னை

சிவத்திரு.தங்க சொர்ணகுமார்(ரானே),
சென்னை

டாக்டர் எம்.ஏ.ஆச்சால், வேலூர்

சிவத்திரு.இரா.முத்துக்குமார சிவாச்சாரியார்,
ஸ்ரீபாலவிநாயகர் ஆலயம், வாரண்ட் ரோடு, மயிலை.

சிவத்திரு.N.கார்த்திகேயன்,
பெரியதெரு, திருவல்லிக்கேணி,சென்னை-05

கே.கே. கோபாலன் சர்மா
பரமேசுவரி நகர், அடையாறு, சென்னை-20

வாழி நலம் சூழ!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy